# அச்சாரம்

ACCHARAM

பல்சுவை மாத இதழ்

Tamil Monthly

மலர் -10 இதழ் -2 செப்டம்பர் 2025 விலை ரூ.15/-

Volume - 10 Issue - 2 September 2025 Price Rs.15/-





TURM PRODUCTION HOUSE
GENEROUS ENTERTAINMENTS
செப்டம்பர் 12
முதல் திரையரங்குகளில்
TURM PRODUCTION HOUSE PRESENTS
தாவுத்
WRITTEN & DIRECTED BY PRASHANTH RAMAN
FBI
A RAKESH AMBIGAPATHY MUSICAL
DIRECTOR OF PHOTOGRAPHY SARATH VALAIYAPATHY & BRENDON SHUSHANTH EDITOR R.K.SRINATH ART DIRECTOR JAI MURUGAN LYRICS ARUN BHARATHI CHOREOGRAPHER SRI KRISH COLORIST SIYAYOUDEEN DI COLORALCHEMIST
VFX I MATTE MEDIA-VETRI SOUND DESIGN A.SATHISH KUMAR COSTUME VIJI, RANJITH, SRI NISHA MAKE UP SABARI MIXING ENGINEER RAJA NALLAIAH DUBBING ENGINEER K.SASI KUMAR PRODUCTION EXECUTIVE A.M.ATHMANATHAN CHIEF ASSOCIATE ARUNAGIRI KUMARAVEL
PRODUCTION CONTROLLER AJAY RAJA, K.MUTHUKUMARESAN ASSOCIATE DIRECTOR SANJAY ARUMUGAM ASSISTANT DIRECTOR SUDHAKAR, KARTHICK, ARTIN RAM, SURIYA PRAKAASH STILLS MEI MEDIA PRO BHUVAN SELVARAJ PUBLICITY DESIGN THANDORA
PRODUCED BY S UMA MAHESWARI
MIRCHI
Trend MUSIC

# ஆசிரியர் பக்கம்

# அச்சாரம்

மலர் – 10 இதழ் –2 செப்டம்பர் 2025

வெளியீட்டாளர் – ஆசிரியர்
**M.C.சேகர் B.E.,**

இணை ஆசிரியர்கள்
**P.ரஞ்சித்குமார், பாலகுமார்சோமு,** R துரை,
**சே.உமா,** V செந்தில்குமார்

துணை ஆசிரியர்கள்
**T.மதுராஜ்,** A. NANDAN A ரேஷ்மா
**R.சரண்குமார் B.E., A.E.SELVAM**
**A.K.MUTHU,**

கௌரவ ஆசிரியர்
**M.SIVAKUMAR**

பொறுப்பாசிரியர்
**M.திரவியப்பாண்டியன் M.A., L.L.B.,**

சிறப்பாசிரியர்
**R.K அன்பழகன்,**
**T.அன்பழகன்,**

முதன்மை நிருபர் – ஆலோசகர்
**பாப்பனப்பட்டு வ.முருகன்**

**நிருபர்கள்**
A.சரவணன்
**B.P.முன்னா**

புகைப்படக் கலைஞர்
**K.சுரேஷ் B.Tech.,**

சட்ட ஆலோசகர்கள்
**K.செந்தூரபாண்டி B.Sc.,B.L.,**
**C.காசிவிஸ்வநாதன் B.Sc., B.L.,**
**P.பாலசுப்பிரமணியம் B.A., B.L.,**

வடிவமைப்பு:
4 மீடியா டிசைன்ஸ் @ 7871696917

SF1, 2nd Floor, 5/10, Anna Colony,
Virugambakkam, Chennai - 600 092.
**Cell: 9444153340**
E-mail: accharam2016@gmail.com



**அனைத்து வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரம் கொடுத்து உதவிக்கொண்டு வருபவர்களுக்கும் முதல் வணக்கம். செப்டம்பர் 1ல் வெளிவரும் அச்சாரம் 10ஆம் ஆண்டின் 2 ஆம் இதழை உங்கள் ஆதரவோடு தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க வாசகர்கள் சந்தாவை செக்காக அனுப்பியது மட்டுமில்லாமல் சந்தா தொகை யினை வங்கியிலும் கட்டி ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**தொடர்ந்து உங்கள் ஆதரவை நல்கும்...**

**M.C.சேகர்** B.E., *ஆசிரியர்*
*செல்:* **9444153340**

# இராசுக்குட்டி பதில்கள்

**நாவடக்கம் தேவை என்கிறார்களே... அது எதனால்?**

- கே.சுதா, சென்னை

ஒரு உறுப்பை வைத்து ஒருவரின் பண்பை எடைபோட முடியுமென்றால், அது நாக்கு மட்டுமே.

நாவின் வன்மையால் இவ்வையத்தில் வாழ்ந்தோரும் உண்டுளூ வீழ்ந்தோரும் உண்டு. எனவே, நாக்கை நமது கட்டுப்பாட்டில் எப்போதும் வைத்திருப்பது மிக அவசியம்.

தேவையற்ற பேச்சை எப்போதும் யாரிடமும் பேசாமல் இருப்பது நல்லது. பேசும்போது நன்றாக சிந்தித்துப் பேசினால் நன்மையே விளையும்.

யாரிடமும் அவரது மனம் புண்படும்படி பேசக் கூடாது. அவ்வாறு பேசினால், அதற்கான துன்பம் வந்து சேரும்.

நாக்கை அடக்கி ஆளக் கற்றுக் கொண்டால், உடலுக்கும் மனதுக்கும் நல்லது.

ஒரு பேரரசனிடம் வலிமைமிக்க யானை ஒன்று இருந்தது. போர்க்களம் செல்லும்போதெல்லாம் அதன் உடல் முழுவதும் வாள்கள் நிறைந்த கவசங்களால் மூடப்பட்டிருக்கும். அதன் வாலில் இரும்புக் குண்டு ஒன்று இணைக்கப்பட்டிருக்கும். போர்சமயங்களில், யானையின் துதிக்கையில் அம்பு படாமல் இருக்க, துதிக்கையை நன்றாகச் சுருட்டி வைத்துக்கொள்ள பாகனால் பழக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் போர்க்களத்தில் அரச யானை புகுந்து, எதிரிப் படைக்குப் பேரழிவை உண்டாக்கியது. அதன் அங்கங்களில் பொருத்தப்பட்டிருந்த ஆயுதங்களில் ஒன்று கீழே விழுந்தபோது, அதை எடுக்க, அதுவரை சுருட்டி வைத்திருந்த துதிக்கையை யானை நீட்டியது. இதைக் கண்ட பாகன், எதிரிகள் துதிக்கையின் மீது ஈட்டியை எறிவதற்குள், விரைவாக அந்த யானையைக் களத்தில் இருந்து வெளியேற்றிக்கொண்டு வந்தான். அரண்மனையில் அரசனைச் சந்தித்த பாகன், “அரசே... நேற்றைய போரில் நமது யானை, போர்க்களத்தில் சுருட்டி வைத்திருந்த தனது துதிக்கையை வெளியே நீட்டிவிட்டது. இனி அது போருக்குப் பயன்படாது...“ என்றான். அரசனும், “இனி அந்த யானையைப் போரில் பயன்படுத்த வேண்டாம்...“ என்று கூறினார்.

மனிதர்கள் தங்கள் நாவை அடக்கும் வரைதான் நன்மை அடைவார்கள். துதிக்கையைச் சுருட்டி வைக்கும் வரைதான், யானைக்குப் பாதுகாப்பு உண்டு.

தேவையில்லாத இடங்களில் துதிக்கையைச் சுருட்டி வைத்துக்கொள்ளும் யானையைப் போல,



அவசியமில்லாத இடங்களில் தங்கள் நாவைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நாக்கின் நீளம் மூன்று அங்குலமேளூ ஆனால், அது ஆறடி மனிதனையும் கொன்றுவிடும்.

வெறுப்பிலும், கோபத்திலும், மகிழ்ச்சியிலும் கூட, வார்த்தைகளை அளந்து பேசுங்கள். அது நமக்குத் திரும்பி வரும்போது, எல்லாமே மாறிவிடும்.

**வாழ்வில் நேரும் நெருக்கடிகள் பற்றிய தங்களின் கருத்து என்ன?**

- ஆ.குமரவேல், விழுப்புரம்

நெருக்கடி என்கிற சூழலை, யாரும் விரும்புவதில்லை. ஏனெனில், நெருக்கடி இல்லாத வாழ்க்கையே நல்லது, வசதியானது என்ற மனப்போக்கு, நம்மில் பலருக்கு இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், ஒருவருக்கு நெருக்கடி வருவது நல்லதுதான். கசப்பான மருந்து இல்லாமல், நோய் குணமாகாது.

ஜப்பானியர்களுக்கு உயிருடன் இருக்கும் மீன் சாப்பிடுவது மிகவும் பிடிக்கும். ஆனால், ஜப்பானியக் கடல் பகுதியில் மீன்கள் அவ்வளவாகக் கிடைப்பதில்லை. படகுகள் கடலுக்குள் வெகுதூரம் சென்றுதான் மீன் பிடித்து திரும்ப வேண்டியிருந்தது. நீண்ட தூரம் சென்று மீன் பிடித்து வருவதால், உயிருடன் இருக்கும் மீனை எப்படிக் கொண்டு வர முடியும்? ஜப்பானியர்களுக்கு அந்த மீன்களின் சுவை பிடிக்கவில்லை.

அவர்கள் யோசித்து, மீன் பிடித்தவுடன் அதனை

ஐஸ் பெட்டியில் போட்டு பதப்படுத்தி கரைக்குக் கொண்டு வந்தார்கள். ஆனால், இந்த மீன்களின் சுவையும் ஜப்பானியர்களுக்கு விருப்பமானதாக இல்லை. எப்படியாவது உயிருடன் மீனைக் கரைக்குக் கொண்டு வர வேண்டும் என்று மீண்டும் யோசித்தார்கள்.

பின்னர், மீன் பிடிக்கும் கப்பலுக்குள் ஒரு பெரிய தொட்டி அமைத்து, பிடித்த மீன்களை அதில் விட்டார்கள். இவ்வாறு உயிருடன் கரைக்குக் கொண்டு வந்து சமைத்தார்கள். ஆனால், பிரச்சனை தீரவில்லை. இப்போதும் மீன்களின் சுவை ருசியாக இல்லை.

பிரச்சனை என்னவென்றால், மீன் தொட்டியும் கடலும் ஒன்றல்ல. இந்த வித்தியாசம் மீன்களுக்குப் புரிந்ததும், அவை அலுத்துப்போய் சும்மா இருந்துவிட்டன. சோர்ந்துபோன மீன்களின் சுவை ஜப்பானியர்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே, தொட்டியில் உள்ள மீன்களை எப்படியாவது சுறுசுறுப்பாக்க வேண்டும் என்று யோசித்தார்கள்.

நடுக்கடலில் மீன்கள் இருக்கும் தொட்டியில் ஒரு சிறிய சுறாவை விட்டார்கள். சுறா, மீன்களைத் துரத்தி வேட்டையாட முயன்றது. இதனால், மீன்கள் முன்பைவிட அதிக சுறுசுறுப்புடன் தொட்டியைச் சுற்றி வந்தன. சில மீன்கள் சுறாவிடம் அகப்பட்டு உயிரிழந்தன. ஆனால், பெரும்பான்மையான மீன்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தன. இதன் ருசி ஜப்பானியர்களுக்கு முழு திருப்தியைத் தந்தது.

தொட்டியில் இலக்கு இல்லாமல், நெருக்கடி இல்லாமல், சவால் இல்லாமல் சுற்றி வந்த மீன்கள், போரடித்துப் போய் சோர்ந்துவிட்டன. அவை மீண்டும் சுறுசுறுப்பாவதற்கு, சுறாக்குட்டி என்கிற நெருக்கடி தேவைப்பட்டது.

நெருக்கடியை சாதிக்கப் பிறந்தவர்கள், சந்திக்கவும் சோர்ந்து போவதில்லை. நெருக்கடி இல்லையென்றால், வாழ்க்கையே சுவையற்றுப் போய்விடும்.

நெருக்கடிகள் நம்மை முடுக்கும்போது, முன்னர் சாதித்தவர்களின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நாளையும் புதிய துவக்கமாகவும், வாழ்வில் புதிய திருப்பமாகவும் பார்த்தால் வெற்றி நிச்சயம்.

சராசரி மனிதர்கள், எந்தவித நெருக்கடியும் இல்லாத வாழ்க்கையை விரும்புகிறார்கள். ஆனால், உண்மையில் நெருக்கடிகள் தான் நம்மை மேலும் வலுவாக்குகின்றனளூ போராடத் தூண்டுகின்றன.

நம்மிடம் இல்லாத திறமைகளைக் கூட, நெருக்கடிகள் தான் வெளிக்கொண்டு வருகின்றன என்பதை உணர்ந்து, அவற்றை வரவேற்றுக் கொண்டாடுங்கள்.

## சிந்திக்க வைக்கும் ஒரு குட்டிக்கதை கூறுங்கள்...

- தி.ஆனந்தி, செங்கல்பட்டு

முன்னொரு காலத்தில் ஒரு சிற்றூரில் ஓர் உழவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். முதுமை அடைந்த அந்த உழவன் இறந்துவிட, அண்ணனும் தம்பியும் வறுமையில் வாடினர்.

தம்பி! இந்த ஊரில் நாம் இருவரும் கடினமாக உழைத்தாலும் வயிறார உண்ண முடியவில்லை. நான் வெளியூர் சென்று பொருள் ஈட்டி வருகிறேன். அதுவரை நீ நம் வீட்டைப் பார்த்துக்கொள். பிறகு வளமாக வாழலாம்!" என்று கூறிவிட்டு அண்ணன் புறப்பட்டான்.

நெடுந்தொலைவு நடந்து ஓர் ஊரை அடைந்தான். அங்கு ஒரு பண்ணையாரிடம் வேலை கேட்கச் சென்றான். ஐயா! வேலை தேடி இவ்வூருக்கு வந்தேன். எனக்கு ஏதேனும் வேலை கொடுங்கள்" என்று வேண்டினான்.

நல்ல இடத்திற்குத்தான் வந்திருக்கிறாய். எனக்கு ஒரு வேலையாள் தேவை. நல்ல ஊதியம் தருவேன். ஆனால்..." என்று இழுத்தார் பண்ணையார்.

எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள். நீங்கள் சொல்வதை அப்படியே செய்வேன்!" என்றான் அவன்.

நீ என்னிடம் ஓர் ஆண்டு வேலை செய்ய வேண்டும். ஆண்டு முடிவில் மூன்று பொற்காசுகள் கூலியாகத் தருவேன். ஆனால், நான் சொல்லும் ஒவ்வொரு வேலையையும் நீ முடிக்க வேண்டும். முடிக்க முடியாத ஒவ்வொரு வேலைக்கும் ஒரு பொற்காசு குறைத்துக்கொள்வேன்!" என்றார் பண்ணையார்.

சூழ்ச்சியை அறியாத அவன், இன்றே வேலைக்குச் சேர்கிறேன். நீங்கள் சொல்வதைச் செய்து முடிப்பேன்!" என்று உறுதியளித்து வேலைக்குச் சேர்ந்தான்.

அவன் உண்மையாக உழைத்தான். நாட்கள் ஓடின. ஓர் ஆண்டு முடிய ஒரு நாள் மட்டுமே இருந்தது. நாளை மூன்று பொற்காசுகள் கிடைக்கும்ளூ ஊருக்குச் சென்று தம்பியுடன் வளமாக வாழலாம்" என்று மகிழ்ச்சியுடன் இருந்தான்.

பொழுது விடிந்ததும் பண்ணையாரிடம் சென்று, ஐயா! இன்றோடு ஓர் ஆண்டு முடிகிறது. சொன்ன கூலியைக் கொடுத்தால் ஊருக்குச் செல்வேன்" என்றான்.

இன்று மாலைதான் ஆண்டு முடிகிறது. உனக்கு மூன்று எளிய வேலைகள் தருகிறேன். மாலைக்குள் அவற்றை முடித்துவிட்டு கூலியை வாங்கிக்கொள். பிறகு மகிழ்ச்சியுடன் ஊருக்குச் செல்" என்றார் பண்ணையார்.

முதல் வேலை என்ன?” என்று கேட்டான் அவன். அங்கே இரண்டு விலை உயர்ந்த பீங்கான் ஜாடிகள் உள்ளன. ஒன்று பெரியது, மற்றொன்று சிறியது. சிறிய ஜாடிக்குள் பெரிய ஜாடியை வைக்க வேண்டும். இதுதான் முதல் வேலை” என்றார்.

ஐயா! சிறிய ஜாடிக்குள் பெரிய ஜாடியை எப்படி வைக்க முடியும்?இது யாராலும் முடியாத செயல்!” என்று அலறினான்.

முடியுமா, முடியாதா என்பது என் கவலை இல்லை. இந்த வேலையைச் செய்யாவிட்டால், ஒரு பொற்காசு குறைப்பேன்!” என்றார் பண்ணையார்.

வேறு வழியின்றி, அடுத்த வேலை என்ன?” என்று கேட்டான். “அந்த அறையில் ஈர நெல் உள்ளது. அதை வெளியே எடுக்காமல் காய வைக்க வேண்டும்” என்றார்.

ஈர நெல்லை வெளியே எடுக்காமல் எப்படிக் காய வைப்பது?வழி சொல்லுங்கள்!” என்று கோபமாகக் கேட்டான்.

வழி எனக்குத் தெரியாது. நான் சொன்னதைச் செய்!” என்றார் பண்ணையார்.

இரண்டு பொற்காசுகளும் போய்விட்டன. ஒரு பொற்காசாவது கிடைக்குமா என்று சோகத்துடன், மூன்றாவது வேலை என்ன?” என்று கேட்டான்.

எளிய வேலை. என் தலையின் எடையைச் சரியாக அளந்து சொல்” என்றார்.

உங்கள் தலையின் எடையை மட்டும் எப்படி அளப்பது? ஓர் ஆண்டு உண்மையாக உழைத்தேன். இரக்கம் காட்டுங்கள்!” என்று கெஞ்சினான்.

நான் சொன்ன மூன்று வேலைகளையும் நீ செய்யவில்லை. ஒப்பந்தப்படி ஒரு பொற்காசு கூட தர மாட்டேன். போ!” என்று கண்டிப்புடன் கூறினார்.

ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அவன், தள்ளாடியபடி ஊர் திரும்பி, தம்பியிடம் நடந்தவற்றைச் சொல்லி அழுதான்.

அண்ணா! உன்னை ஏமாற்றிய அந்தப் பண்ணையாரைப் பழிக்குப் பழி வாங்குகிறேன்!” என்று கோபத்துடன் கூறிவிட்டு தம்பி புறப்பட்டான்.

அவன் பண்ணையாரைச் சந்தித்து, ஐயா! வேலை தேடி வெளியூரிலிருந்து வந்தேன். ஏதேனும் வேலை கிடைக்குமா?” என்று பணிவுடன் கேட்டான்.

ஏமாளிக்கு உலகில் பஞ்சமில்லை. இவனை ஏமாற்றி வேலை வாங்க வேண்டும்,” என்று நினைத்தார் பண்ணையார்.

ஒரு ஆண்டு வேலை செய். முடிவில் மூன்று பொற்காசுகள் தருவேன்” என்றார். ஓர் ஆண்டு முடிந்தது. ஐயா! இன்றோடு ஆண்டு முடிகிறது” என்றான் தம்பி.

மூன்று எளிய வேலைகள் தருகிறேன். முடித்து விட்டு கூலியை வாங்கிப் போ” என்றார் பண்ணையார்.

முதல் வேலை, சிறிய பீங்கான் ஜாடிக்குள் பெரிய ஜாடியை வை” என்றார். எளிய வேலை!” என்ற தம்பி, ஒரு தடியை எடுத்து, பண்ணையாரின் கண் முன்னே பெரிய ஜாடியை உடைத்து நொறுக்கினான்.

என்ன செய்கிறாய்?” என்று பதறினார். பெரிய ஜாடியை உடைத்தால் தான் சிறிய ஜாடிக்குள் வைக்க முடியும்,” என்றான். திகைத்தார் பண்ணையார்.

அடுத்த வேலை என்ன?” என்று கேட்டான். ஈர நெல்லை வெளியே எடுக்காமல் காய வை” என்றார்.

தம்பி கூரையின் மேல் ஏறி, அதைப் பிரித்து எறியத் தொடங்கினான். “வீட்டை நாசமாக்குகிறாயே!” என்று கத்தினார். “கூரையைப் பிரித்தால் கதிரவன் ஒளி அறையில் படும்ளூ நெல் காயும். நீங்களே தடுக்கிறீர்கள்!” என்று கூறி, மேலும் கூரையைப் பிரித்தான். வீடு குட்டிச் சுவரைப் போலாகிவிட்டது.

என்னிடம் திறமை காட்டுகிறாயா? மூன்றாவது வேலை, என் தலையின் எடையைச் சரியாகச் சொல்” என்றார்.

அஎளிய வேலை!” என்ற தம்பி, ஒரு பூசணிக்காயைப் பறித்து வந்து, உங்கள் தலையின் எடையும் இந்தப் பூசணிக்காயின் எடையும் ஒன்று. தராசில் பூசணிக்காயை ஒரு தட்டில் வைக்கிறேன். உங்கள் தலையை வெட்டி மறு தட்டில் வைத்து அளப்பேன்” என்று கத்தியுடன் நெருங்கினான்.

ஐயோ! இவனிடம் மாட்டிக்கொண்டேனே!” என்று நடுங்கிய பண்ணையார், இனி ஏழைகளை ஏமாற்ற மாட்டேன். உனக்கு மூன்று பொற்காசுகளுடன், உன் அண்ணனுக்கு மூன்று பொற்காசுகளையும் தருகிறேன்” என்றார்.

ஆறு பொற்காசுகளைப் பெற்று, தம்பி வெற்றியுடன் திரும்பினான். பண்ணையாரும் அன்றிலிருந்து மற்றவர்களை ஏமாற்றுவதை நிறுத்தினார்.

## எந்தவகை மனிதர்களைத் தவிர்க்க வேண்டும்?

- பொ.தினேஷ்'குமார், காஞ்சிபுரம்

தவிர்க்க வேண்டிய 7 வகையான மனிதர்கள்:

உப்புமூட்டை மனிதர்கள்: இவர்கள் உங்கள் ஆற்றலையும் நேரத்தையும் வீணடிப்பவர்கள். உங்கள் தேவைகளைக் கருத்தில் கொள்ளாமல், தங்களுக்காக எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பவர்கள். இவர்கள் உங்கள் ஆற்றல், நேரம் மற்றும் வளங்களைச் சுரண்டுபவர்கள்.

கொசு மனிதர்கள்: இவர்கள் உங்கள் வாழ்க்கையில் எதிர்மறையைச் செலுத்தி, உங்களிடமிருந்து நன்மைகளைப் பெற விரும்புபவர்கள். இவர்களிடம் வழங்குவதற்கு எந்த நல்ல விஷயமும்

இருக்காது. ஆனால், மற்றவர்களிடமிருந்து எதைப் பெற முடியும் என்பதில் எப்போதும் கவனமாக இருப்பார்கள்.

ஆதிக்க மனிதர்கள்: இவர்கள் பெருமையைத் தேடுபவர்களும், பிறரைக் கட்டுப்படுத்த விரும்புபவர்களும் ஆவர். ஒருமுறை உங்களுக்கு உதவி செய்தாலும், உங்கள் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தவும், உங்கள் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவும் முயல்பவர்கள்.

முதலை மனிதர்கள்: இவர்கள் உண்மையான நோக்கமற்ற பாசாங்கு மனிதர்கள். உங்கள் ரகசியங்களை அறிந்து கொள்வதற்காக உங்களுடன் நெருங்கிப் பழகுவார்கள். ஆனால், பிரச்சினைகள் ஏற்படும்போது, அந்தத் தகவல்களை உங்களுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடியவர்கள். இவர்கள் பொய்யர்களும், முதுகில் குத்துபவர்களும் ஆவர்.

பச்சோந்தி மனிதர்கள்: இவர்கள் பொறாமை கொண்டவர்களாகவும், உங்களுடன் ஆரோக்கியமற்ற போட்டியில் ஈடுபடுபவர்களாகவும் இருப்பார்கள். உங்கள் முன்னேற்றத்தை ரகசியமாகக் கண்காணித்து, உங்கள் வெற்றிகளை ஆதரிக்காமல் அல்லது கொண்டாடாமல், உங்கள் தவறுகளைப் பெரிதுபடுத்துவார்கள். கொஞ்சம் அசந்தால், உங்களைக் குற்ற உணர்வில் தள்ளிவிடுவார்கள்.

கனவுக் கொலையாளிகள்: இவர்கள் உங்கள் கனவுகளைப் பாராட்டவோ, ஆதரிக்கவோ மாட்டார்கள். உங்கள் தோல்விகளை விரும்பி, அதை மனதார ரசிப்பவர்கள். எப்போதும் எதிர்மறையான விளைவுகளை உருவாக்குபவர்கள். தீர்வுகளுக்குப் பதிலாகப் பிரச்சினைகளை உண்டாக்குவார்கள்.

குப்பை மனிதர்கள்: இவர்கள் எதிர்மறையான மற்றும் கெட்ட செய்திகளைக் கொண்டு வருபவர்கள். இவர்களின் வாழ்க்கை, குப்பைகளால் நிரம்பியிருக்கும். உங்கள் ஊக்கத்தைக் கெடுத்து, மனச்சோர்வை ஏற்படுத்தும் தகவல்களைப் பரப்புவார்கள். மற்றவர்களின் இதயத்தை நொறுக்கி, அதை செய்தியாக்கி, அதில் மகிழ்ச்சி அடைபவர்கள்.

உங்களைச் சுற்றியுள்ள மனிதர்களை மதிப்பீடு செய்து, நேர்மறையான தாக்கங்களால் சூழப்பட்டிருப்பதை உறுதிசெய்வது உங்கள் பொறுப்பு. நேர்மறையான மனிதர்களுடன் பழகும்போது, எதிர்மறையானவர்களிடம் இருந்து உங்களைத் துண்டித்துக் கொள்ளும்போது, உங்கள் வாழ்க்கை வெற்றிக்கான சரியான திசையில் நகரும்.

இங்கிலாந்தைச் இந்துஜா குழுமம், தமிழ்நாட்டில் மின்சார வாகனம் மற்றும், பேட்டரி சேமிப்பு அமைப்புகளுக்காக ரூ.7,500 கோடியை முதலீடு செய்ய தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

இதன் மூலம் 1,000க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும்



**நிகழ்காலம்**

வாழ்வின் கடைசிவரைக்கும்
உடன்வருவேன் என வாக்குத்தந்தோர் எவரும்
உடன் வந்ததாகச் சான்றில்லை...

எவரில்லை என்றாலும்
நீ மட்டும் பிரியாதே என
சத்தியம் வாங்கியவர்கள்
வாங்கிய கையோடு
காணாமல் போனதாகவே
வரலாறு...

வாக்குறுதி பொய்
சத்தியம் பொய்
நம்பிக்கை பொய் எனில்
எதுதான் மெய்..?

காலச் சக்கரத்தில்
என்றேனும் எங்கேனும்
மீண்டும் சந்திக்க நேர்கையில்
அமர்ந்து சிரித்துக் கதைபேச
நினைவைச் சேகரிக்கும்
இந்நிகழ்காலம்...

- P.ரஞ்சித்குமார்.

# தாவுத் திரைப்பட இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா

**கண்டண்ட் நன்றாக இருந்தால் கவலைப்படத் தேவையில்லை. உங்கள் படம் ஜெயிக்கும் இயக்குனர் சுசீந்திரன் பேச்சு.**

TURM புரொடக்ஷன் ஹவுஸ் என்ற பட நிறுவனம் சார்பில் S. உமா மகேஸ்வரி தயாரிப்பில், அறிமுக இயக்குநர் பிரசாந்த் ராமன் இயக்கத்தில், லிங்கா, சாரா ஆச்சர் நடிப்பில், அடிதடி வெட்டு குத்துச் சண்டைக் காட்சிகளே இல்லாத ஒரு வித்தியாசமான கேங்ஸ்டர் படமாக உருவாகியுள்ள படம் "தாவுத்". இம்மாதம் 12 ஆம் தேதி திரைக்கு வரவுள்ள இப்படத்தின், இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா படக்குழுவினருடன், திரைப்பிரபலங்கள் கலந்துகொள்ள கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வினில்

**நடிகர் ராதாரவி பேசியதாவது...**

சமீபமாக எனக்கு உடல் நிலை சரியில்லை. மன்னித்துக்கொள்ளுங்கள். சினிமாக்காரன் எப்போதும் தூங்கும் போது கூட காலை ஆட்டிக்கொண்டு தூங்க வேண்டும், இல்லையெனில் வேறு ஆளை போட்டு விடுவார்கள். இந்தப்படத்தில் இரண்டு நாள்கள் தான் வேலை பார்த்தேன். தம்பிதுரை தான் தயாரிப்பாளர் ஆனால் அவர் பெயர் வரவில்லையே எனப் பார்த்தேன், ஆனால் படத்தில் கதாப்பாத்திரத்திற்கு அந்தப்பெயர் வைத்து விட்டார். வாழ்த்துக்கள். படத்தில் பேய் இருக்கிறதா? இரத்தம் இருக்கிறதா? எனக்கேட்டேன் ஆனால் எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இன்றைய காலத்தில் இதெல்லாம் வெற்றிக்குத் தேவைப்படுகிறது. ரஜினியே அத்தனை வெட்டு குத்து, இரத்தம் தெறிக்க நடிக்கிறார். அவரே இரத்தத்தை நம்பும்போது நம்மைச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. படத்தில் நாம் கொஞ்சம் சுயநலமாகத் தான் இருக்க வேண்டும். கதாப்பாத்திரத்திற்கு தயாரிப்பாளர் தன் பெயர் வைத்தது போல இருக்க வேண்டும். படம் மிக அருமையாக வந்துள்ளது. எல்லோரும் மிக நன்றாக நடித்துள்ளனர். படம் மிகப்பெரிய வெற்றி பெற என் வாழ்த்துக்கள். தமிழ் வாழ வேண்டும் என்றால் அனைவரும் தமிழ்ப்படங்கள் பார்க்க வேண்டும். எல்லோரும் திரையரங்கில் இப்படத்தைப் பாருங்கள் நன்றி.



**இசையமைப்பாளர் ராக்கேஷ் அம்பிகாபதி பேசியதாவது...,**

எங்களை வாழ்த்த வந்துள்ள ஆளுமைகளுக்கு நன்றி. தயாரிப்பாளர் தம்பிதுரை சார், நாங்கள் ஆணாதிக்கம் எனக் குறும்படம் எடுத்த போது, அதில் நடித்தார். அவர் இந்த படத்தை இந்த மேடைக்கு எடுத்து வர எவ்வளவு கஷ்டப் பட்டார் எனப் பார்த்துள்ளேன். பல தடைகளைக் கடந்து இப்படம் வந்துள்ளது. தாவுத் இப்ராஹிம் பற்றி உங்களுக்குத் தெரியும் அதற்கும் இந்த கதைக்கும் கண்டிப்பாகச் சம்பந்தம் இல்லை. தாவுத் ஆரம்பித்து 2 வருடங்கள் ஆகிவிட்டது. மிகப்பெரிய பயணம். அருண்பாரதி அண்ணன் 100வது பாடலை இசையமைத்துள்ளேன் என்பது மகிழ்ச்சி. படத்தில் எல்லோரும் மிக நன்றாக நடித்துள்ளனர். படம் மிக நன்றாக வந்துள்ளது. அனைவரும் ஆதரவு தாருங்கள் நன்றி. நான்

**நாயகி சாரா ஆச்சர் பேசியதாவது...**

பிரசாந்த் சார் கால் செய்து ஒரு கதை வைத்திருக்கிறேன் என ஆபிஸ் வரச்சொன்னார். அவர் சொன்ன கதை எனக்குத் தானா? என ஆச்சரியமாக இருந்தது. மிகச் சவாலான கேரக்டர். படத்தில் கொஞ்சமே வந்தாலும், நல்ல கேரக்டர். என்னை நம்பி தந்ததற்கு இயக்குநருக்கு, தயாரிப்பாளருக்கு நன்றி. இசை சூப்பராக வந்துள்ளது. படத்திற்கு உங்கள் ஆதரவைத் தாருங்கள் நன்றி.

**நாயகன் லிங்கா பேசியதாவது...,**

சென்னை உங்களை அன்புடன் நான் நடித்த முதல் படம், அது வெளியாகி 10 வருடம் ஆகிறது. இப்போது ஹீரோவாக முதல் படம். அஜய் பிரதர்

இப்படம் மூலம் தான் பழக்கம் அவர் நான் தான் லீடாக நடிக்கிறேன் என்றார். சாரா நான் தான் லீட் என்றார், கிட்டதட்ட படத்தில் நடிக்கும் அனைவருமே லீட் தான் என்றார்கள். இயக்குநர் எல்லோரிடமும் நீங்கள் தான் நாயகன் என சொல்லியிருக்கி-றார். அதன் பிறகு நான் லீட் என சொல்வதையே நிறுத்திவிட்டேன். ஆனால் படம் பார்த்த பிறகு தான் புரிந்தது. படத்தில் எல்லோருக்குமே லீட் மாதிரியான கேரக்டர் தான். ஏதோ கொஞ்சம் அதிகமாக இருப்பதால் நான் லீட் எனச் சொல்கிறேன். நாயகி கூட எனக்குத் தான் காட்சிகள் அதிகம், ஆனால் போட்டுருக்க சட்டை என்னுடையதில்லை என்பது போல, அவர் எனக்கு ஜோடி இல்லை. பரவாயில்லை. தம்பிதுரை சார் படம் ஆரம்பிக்கும் போது பார்த்தேன் சம்பளம் எல்லாம் பேசினார், அதன்பிறகு ஒரு நாள் கூட ‘ூட் வந்ததே இல்லை. இயக்குநர் பிரசாந்த் மீது முழு நம்பிக்கை வைத்தார். அவர் இந்தப்பணத்தை அவர் நலனுக்குச் செலவழித்திருக்கலாம். ஆனால் இந்தப்படம் எங்களை நம்பி எடுத்துள்ளார். உங்களால் பல குடும்பங்கள் சாப்பிட்டுள்ளது சார் நன்றி. படம் மிகச்சிறப்பாக வந்துள்ளது அனைவரும் திரையரங்கில் வந்து பாருங்கள் நன்றி.

**இயக்குநர் பிரசாந்த் ராமன் பேசியதாவது...**



சின்ன படங்கள் ஜெயித்தால் தான் இன்ட்ஸ்ட்ரி நல்லா இருக்குமெனச் சொல்வார்கள், அதை மனதில் வைத்து ஆதரவு தரும் அனைவருக்கும் நன்றி. பாபி சிம்ஹா சார் இந்தப்படத்திற்குக் கடைசி நிமிடத்தில் உதவி செய்தார். அதே போல் இந்தப் படத்திற்கு உதவி செய்த மக்கள் செல்வன் விஜய் சேதுபதிக்கு நன்றி. பீட்சா டெலிவரி பாயாக இருந்து இயக்குநர் ஆகியுள்ளேன். அதற்குக் காரணம் தயாரிப்பாளர் தம்பி துரை சார். அவர் வெத்தலையில் இருந்து பித்தலை எடுப்பவர். நல்ல பெயர் அவர் எடுத்துக்கொள்வார் ஏதாவது பிரச்சனை என்றால் என்னை மாட்டிவிடுவார். ரதாரவி சார் நடித்தால் நன்றாக இருக்கும் என்றேன், உடனே பேசி வரச்சொல்கி-றார் என அவரிடம் அனுப்பிவிட்டார். நான் பயந்து கொண்டே போனேன் ஆனால் அவர் என்னை அவ்வளவு மரியாதையாக நடத்தினார். சார் சம்பளம் என கேட்டேன், நான் வந்தால் நீ நல்லா இருப்பேல்ல.. போ பார்த்துக்கொள்ளலாம் என்றார். அவர் மாதிரி ஆட்கள் இருப்பதால் தான், சின்ன பட்ஜெட் படங்கள் உயிர் வாழ்கிறது. தயாரிப்பாளர் எல்லாவற்றிலும் கணக்கு பார்ப்பார் ஆனால் சாப்பாட்டில் என்றுமே கணக்கு பார்த்ததில்லை. எல்லாமே என்னை நம்பி தந்துவிட்டார். அவர் நம்பிக்கையைக் காப்பாற்றி விட்டேன் என நம்புகிறேன். லிங்கா முதல் நாள் ீட்டில் 7 விதமாக நடித்துக் காட்டினார். எனக்கு என்ன தேவை என்பதைக் காட்டத்தான் அவ்வாறு நடித்தார். இந்த கதாப்பாத்திரத்திற்காக அவ்வளவு உழைத்துள்ளார். சாரா சிறப்பாக நடித்துள்ளார். சரத் ரவியை வில்லனாக யாரும் ஒத்துக்கொள்ளவில்லை, ஆனால் படம் பார்க்கும் போது அனைவரும் பாராட்டுவார்கள். நாயகி சாரா உலக சினிமா பார்ப்பவர்களுக்குக் கண்டிப்பாகப் பிடிக்கும். இசையமைப்பாளர் ராக்கேஷ்‘ என் நண்பன், என் அடுத்த படத்திற்கும் அவர் தான் இசையமைப்பாளராக இருப்பார். மிக அட்டகாசமாக இசையமைத்துள்ளார். படத்தில் உழைத்த அனை-த்து கலைஞர்களுக்கும் நன்றி. படம் மிகச்சிறப்பாக வந்துள்ளது. இம்மாதம் 12ஆம் தேதி 12 படம் வருகிறது அனைவரும் உங்கள் ஆதரவைத் தாருங்கள் நன்றி.

**இயக்குநர் சுசீந்திரன் பேசியதாவது...**

மிக மகிழ்ச்சியாக உள்ளது. சு‘ாந்த் கேமராமேன் 6 மாதம் முன் அவருடன் வேலை பார்த்தேன் மிகுந்த திறமைசாலி. அவர் தான் ஆடியோ லாஞ்ச் கூப்பிட்டார். போஸ்டர் பார்த்தாலே படத்தை-தப்பற்றிப் புரிந்து விடும். போஸ்டர் மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் நடித்திருக்கும் நடிகர்கள் எல்லாமே தங்களுக்கு ஏதாவது முக்கியத்துவம் இருந்தால் தான் நடிப்பார்கள். இத்தனை நல்ல நடிகர்களை நடிக்க வைத்திருப்பதிலேயே படத்தின் வெற்றி உறுதியாகிவிட்டது. இயக்குநர் டார்க் ஹியூமரில் அழகாகப் படத்தை இயக்கியுள்ளார். லிங்கா பல வருடங்களாக அவரைப்பார்த்து வருகிறேன் ஒரு நடிகரிடம் இன்னொஸன்ஸ் இருந்தால் மக்களுக்குப் பிடிக்கும், ரஜினி சாரிடம் இருக்கும் இன்னொஸன்ஸ் லிங்காவிடம் இருக்கிறது. அவர்



ஜெயிக்க வாழ்த்துகள். 100 வது பாடல் எழுதியுள்ள அருண் பாரதிக்கு வாழ்த்துக்கள். தயாரிப்பாளருக்கு தம்பிதுரைக்கு வாழ்த்துக்கள். கண்டண்ட் நன்றாக இருந்தால் எதைப்பற்றியும் கவலைப்படத் தேவையில்லை. உங்கள் படம் ஜெயிக்கும் வாழ்த்துக்கள்.

பரோல், உடன்பால், பெண்குயின், சேதுபதி போன்ற படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த லிங்கா காதநாயகனாக நடித்துள்ளார். சாரா ஆச்சர் இந்த படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகிறார்.

மற்றும் வத்திகுச்சி, காலா போன்ற படங்களில் முக்கி கதாபாத்திரத்தில் நடித்த திலீபன், ராதாரவி, சாய் தீனா, ஸாரா, வையாபுரி, சரத்ரவி, அர்ஜெய், அபிஷேக், ஆனந்த் நாக், ஜெயகுமார், சேரன்ராஜ், சரவணன் சீலன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு சரத் வளையாபதி மற்றும் பிரேண்டன் சு'ந்த் இருவரும் ஒளிப்பதிவு செய்திருக்கின்றனர். அருண் பாரதி பாடல்களுக்கு ராக்கேஷ' அம்பிகாபதி இசையமைத்துள்ளார். R. K. ஸ்ரீநாத் எடிட்டிங் செய்ய,கலை இயக்கத்தை ஜெய் முருகன் மேற்கொள்ள, ஸ்ரீக்ரி' நடனம் அமைத்துள்ளார்.

மக்கள் தொடர்பு - புவன் செல்வராஜ்
தயாரிப்பு - S. உமா மகேஸ்வரி
கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார் அறிமுக இயக்குனர் பிரசாந்த் ராமன்.

இப்படம் வரும் செப்டம்பர் மாதம் 12 ஆம் தேதி உலகமெங்கும் திரையரங்குகளில் வெளியாகிறது

**விலக்கப்பட்ட கனி**

முதலில் சொன்னால்
பெண்மை சறுக்குமோ
முழுதும் சொன்னால்
பெருமைதான் சிரிக்குமோ
பேசு பொருளில் போக்கு காட்டி
பேசிய பொருளில்
நாக்கு கடிக்கிறாய்
நாக்கடியே கற்கண்டாக
ஆழம் பார்க்கிறாய்
அறிவேன் பெண்ணே
நான் வேழமல்லவா
நீ போட மறைக்கும்
ஆதிகால கோலமல்லவா
அருகினில்
இரும்புப் பூ நாடகம்
அருகாமையில்
இதயப்பூ தோரணம்
சிரித்துக் கொண்டேன்
உன் சிருங்கார உளறல்கள்
சிலிர்க்கக் கண்டேன்
ஒத்த விதை
யார் விதைத்தால் என்ன
முத்தக் கிளைகள்
வராமலா போகும்
கொத்தும்
கிளிகள் காத்திருக்கின்றன
விலக்கப்பட்ட கனிகளே
இன்னும் எதற்கு...!

கவிஜி

அச்சாரம் OTT
விரைவில்

# கட்டா குஸ்தி 2 பிரம்மாண்ட பூஜையுடன் இனிதே துவங்கியது



விஷ்ணு விஷால் ஸ்டுடியோஸ் மற்றும் வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் தயாரிப்பில், விஷ்ணு விஷால் – ஐஸ்வர்யா லட்சுமி ஜோடி நடிப்பில், செல்லா அய்யாவு இயக்கத்தில், 2022 ஆம் ஆண்டு வெளியாகி பிளாக்பஸ்டர் வெற்றி பெற்ற "கட்டா குஸ்தி" படத்தின் இரண்டாம் பாகம் "கட்டா குஸ்தி 2" இன்று பிரம்மாண்டமான பூஜையுடன் இனிதே துவங்கியது. முன்னதாக, இப்படத்தின் அறிவிப்பையொட்டி வெளியிடப்பட்ட ப்ரொமோ வீடியோ, ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்று, இணையம் முழுவதும் வைரலாகியது. இதில் விஷிணு விஷால், ஐசரி கே கணேஷ் , ஐஸ்வர்யா லட்சுமி, கருணாஸ், காளி வெங்கட், முனீஷ்காந்த் ஆகியோருடன் இயக்குநர் செல்லா அய்யாவும் தோன்றினார். வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவையுடன் அமைந்த அந்த ப்ரொமோ, இப்படமும் மிரட்டலாக இருக்கும் என்பதை வெளிப்படுத்தியது.

முந்தைய பாகத்தின் கதை முடிந்திருந்தாலும், அதன் தொடர்ச்சியாக, ஸ்போர்ட்ஸ் டிராமா ஜானரில், எல்லோரின் இல்லங்களிலும் காணப்படும் முக்கிய பிரச்சினைகளை நகைச்சுவை வடிவில் பதிவு செய்யும் வகையில், அனைவரும் ரசிக்கும் வணிக ரீதியான பொழுதுபோக்கு திரைப்படமாக இந்தப் படம் உருவாகிறது.

முதல் பாகத்தில் நடித்த ஜோடியான விஷ்"ணு விஷ்'ால் – ஐஸ்வர்யா லட்சுமி மீண்டும் நாயகன், நாயகியாக நடிக்கின்றனர். அதோடு, முதல் பாகத்தில் நடித்த கருணாஸ், காளி வெங்கட், முனீஷ்காந்த், கஜராஜ் ஆகியோரும் தொடர்கிறார்கள். இவர்களுடன் நடிகர் கருணாகரன் முக்கியமான வேடத்தில் இணைகிறார். முதல் பாகத்தை தயாரித்திருந்த விஷ்"ணு விஷ்'ால் ஸ்டுடியோஸ் நிறுவனத்துடன், வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷ்'னல் நிறுவனமும் இணைந்து, இப்படத்தை பெரிய பட்ஜெட்டில் பிரம்மாண்டமாக தயாரிக்கின்றனர். சுப்ரா, ஆர்யன் ரமேஷ்" மற்றும் ஐவி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனத்தின் இஷ்'ான் சக்சேனா இணை தயாரிப்பாளர்களாக பணியாற்றுகின்றனர். படப்பிடிப்பு சென்னை, அம்பாசமுத்திரம், பொள்ளாச்சி, பாலக்காடு ஆகிய இடங்களில் ஒரே கட்டமாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

படம் தொடர்பான மற்ற தகவல்கள் விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

தொழில்நுட்பக் குழுவினர்:

தயாரிப்பு: விஷ்"ணு விஷ்'ால் ஸ்டுடியோஸ் & வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷ்'னல்

இயக்கம்: செல்லா அய்யாவு

ஒளிப்பதிவு: கே. எம். பாஸ்கரன்

இசை: ஷான் ரோல்டன்

எடிட்டிங்: பரத் விக்ரமன்

கலை இயக்கம்: எஸ். ஜெயச்சந்திரன்

சண்டைக் காட்சிகள்: முருகன்

நடன அமைப்பு: பாபா பாஸ்கர்

பாடல்வரிகள்: மோகன்ராஜன்

தலைமை நிர்வாகம் (வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல்): நிதின் சத்யா

மக்கள் தொடர்பு (PRO): சதீஷ்' (AIM)

# பிளாக்மெயில்’ படத்தின் ப்ரீ ரிலீஸ் நிகழ்வு




மு. மாறன் இயக்கத்தில், **JDS** ∴பிலிம் ∴ பேக்டரி பேனரில் ஜெயக்கொடி அமல்ராஜ் தயாரிப்பில் ஜிவி பிரகாஷ்‘குமார் நடித்துள்ள பிளாக்மெயில்’ திரைப்படம் செப்டம்பர் 12, 2025 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது. படத்தின் ப்ரீ ரிலீஸ் நிகழ்வு சென்னையில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்ட தயாரிப்பாளர் அமல்ராஜ், **“**கடந்த ஜுலை 18 படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது. அதை மக்கஎிடம் கொண்டு போய் சேர்த்த ஊடகத்திற்கு நன்றி. படத்திற்கு மேலும் பக்கபலமாக தனஞ்செயன் சார் படத்தை விநியோகம் செய்கிறார். இந்தப் படத்தை ஜிவி பிரகாஷ்‘ சரியான நேரத்தில் முடித்துக் கொடுத்தார். தேஜு அஸ்வினி, ரமேஷ்‘ திலக், வேட்டை முத்துக்குமார், பிந்து மாதவி என நடிகர்கள் அனைவரும் சரியான நேரத்தில் நல்லபடியாக படத்தை முடித்துக் கொடுத்தனர். இயக்குநர் மாறன், கேமராமேன், எடிட்டர், ஆர்ட் டைரக்டர் எனத் தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் நன்றி. படத்தில் ஒத்துக்கறியா...| பாடலை இசையமைத்துக் கொடுத்த இமான் மற்றும் சாம்.சி.எஸ். இருவருக்கும் நன்றி. உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை” என்றார்.

**ஒளிப்பதிவாளர் கோகுல் பினாய்,** “இந்த படத்தின் வாய்ப்பு ஜிவி பிரகா‘ சார் மூலம்தான் வந்தது. தயாரிப்பாளர் ரொம்பவே வெள்ளந்தியானவர். அவருக்கு இந்தப் படம் மூலம் நல்லது நடக்க வேண்டும். கண்டிப்பாக உங்கள் ஆதரவு தேவை. படத்தின் நடிகர்கள் எல்லாரும் நண்பர்களாக பழகினார்கள். இயக்குநர் மற்றும் உடன் பணிபுரிந்த அனைவருக்கும் நன்றி” என்றார்.

**கலை இயக்குநர் ராம்,** “மாறன் சார் சொன்ன கதை லைவ்வாக இருந்தது. யதார்த்தம் மீறாமல் செட் இருக்க வேண்டும் என அவர் எதிர்பார்த்தார். அதுபோலவே செய்திருக்கிறேன். வாய்ப்பு கொடுத்த தயாரிப்பாளர் அமல்ராஜ் அவருக்கும் நன்றி” என்றார்.

**நடிகர் ரஷேம்‘ திலக்,** “தயாரிப்பாளரின் நல்ல மனதுக்கு படம் ஜெயிக்க வேண்டும். இயக்குநர் மாறன் பழகுவதற்கு ரொம்பவே தன்மையானவர். தேஜுவுடன் பணிபுரிந்தது மகிழ்ச்சி. ஜிவி பிரகாஷ்‘ டன் முதல் முறை பணிபுரிகிறேன். நல்ல நண்பர் கிடைத்திருக்கிறார். மிகப்பெரிய போராட்டத்திற்கு பிறகு இந்தப் படம் வெளியாகிறது. உங்கள் ஆதரவு தேவை”.

**நடிகர் முத்துக்குமார்,** “பல சோதனைகள் கடந்து வந்த தயாரிப்பாளருக்கு நன்றி. அவருக்கு இந்தப் படம் பெரிய லாபமாக அமைய வேண்டும். நான் இதுவரை நடிக்காத கதாபாத்திரம் கொடுத்த இயக்குநர் மாறனுக்கு நன்றி. தேஜுவுக்கு வாழ்த்துக்கள்! மற்ற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்”.

**நடிகர் லிங்கா,** “இந்தப் படத்தில் வேலை செய்த அனைவருக்காகவும் இந்தப் படம் வெற்றியடைய வேண்டும். தயாரிப்பாளர் மிகவும் தன்மையானவர். இயக்குநர் மாறன் ரொம்பவே சின்சியர். புது

திறமையானவர்களை ஊக்குவிப்பதில் ஜிவி பிரகாஷ்‘ அதிக ஆர்வம் காட்டுவார். தனஞ்செயன் சாருக்கு நன்றி”.

**நடிகை கிரிஜா ஹரி,** “நல்ல டீமுடனும் நல்ல கதையிலும் நடித்தது மகிழ்ச்சி. உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை”.

**நடிகை தேஜூ அஸ்வினி**, “தனஞ்செயன் சாருக்கு நன்றி. இந்தப் படம் எனக்கு பெரிய ஓப்பனிங்காக இருக்கும். படக்குழுவினர் அனைவருக்கும் நன்றி. தியேட்டருக்கு வந்து கண்டிப்பாக படம் பாருங்கள்”.

**இயக்குநர் சசி,** “‘பிளாக்மெயில்’ படத்தின் கதையை ஜிவி சொன்னபோது ரொம்பவே ஆர்வமாக இருந்தது. இந்தப் படம் மாறனுக்கு மட்டுமல்ல, படக்குழுவினர் அனைவருக்குமே வெற்றியாக அமையும். அவருக்கு நடிப்பு இயல்பாகவே வருகிறது. அனைவருக்கும் வாழ்த்துக்கள். தனஞ்செயன் சாரின் முயற்சிக்கும் நன்றி”.

**இயக்குநர் சதீஷ்‘ செல்லகுமார்,** “தயாரிப்பு செய்துவிட்டு, அதை வழங்குவது பெரிய வி‘யம். அதை செய்த தனஞ்செயன் சாருக்கு நன்றி. மாறன் சாரின் படங்களுக்கு நான் ரசிகன். இந்தப் படமும் சிறப்பாக வந்துள்ளது என்ற நம்பிக்கை உள்ளது. ஜிவி பிரகாஷ்‘ சார், தேஜூ அஸ்வினி அனைவருக்கும் வாழ்த்துக்கள்”.

**இயக்குநர் ரிதேஷ்‘,** “|பிளாக்மெயில்’ படத்தின் டிரெய்லர், பாடல்கள் எல்லாமே நம்பிக்கையாக உள்ளது. இந்த நல்ல படம் அதற்கான நல்ல வெளியீட்டு தேதியை தேர்ந்தெடுத்துள்ளது. ஜிவி சாருடன் இணைந்து ஒரு படம் பணிபுரிய வேண்டும். தனஞ்செயன் சாருக்கு வாழ்த்துக்கள்”.

**இயக்குநர் பிவி சங்கர்,** “மாறனுடைய எல்லா படங்களுமே த்ரில்லிங்காக இருக்கும். இந்தப் படமும் நிச்சயம் அந்த நம்பிக்கையை காப்பாற்றும். படக்குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துக்கள்”.

**இயக்குநர் விஜய்,** “தயாரிப்பாளர் அமல்ராஜுக்கு வாழ்த்துக்கள். தனஞ்செயன் சார் இந்தப் படத்தை தன்னுடைய படமாக எடுத்து செல்வார். அவருக்கும் ஒட்டுமொத்த படக்குழுவினருக்கும் வாழ்த்துக்கள். நான் சைவம்’ படம் எடுத்தபோது எனக்கு சம்பளம் வாங்காமல் இசையமைத்தார் ஜிவி. எனக்கும் அவருக்கும் 20 வருட நட்பு உள்ளது. எனது கரியரில் ஜிவி மிகப்பெரிய சப்போர்ட் கொடுத்திருக்கிறார். நடிகர், இசையமைப்பாள ராக அவரது வளர்ச்சி பிரம்மிக்க வைக்கிறது. ஒட்டுமொத்த படக்குழுவினருக்கும் வாழ்த்துக்கள்”.

**அம்மா கிரியேஷன்ஸ், டி. சிவா,** “படக்-குழுவினர் அனைவருமே ஆத்மார்த்தமாக தயாரிப்பாளருக்காக பேசினார்கள். இவ்வளவு பேரின் வாழ்த்து நிச்சயம் அவருக்கு லாபகரமானதாக மாறும். தனஞ்செயன் சாருக்கும் நன்றியும் வாழ்த்துக்களும். புது இயக்குநர்களுக்கு அதிக படம் செய்து கொடுத்தவர் ஜிவி பிரகா‘. பேரம் பேசாமல் போதும் என்ற மனதோடு இசையும் அமைத்து கொடுப்பார் படங்களும் நடிப்பார். அவர் இன்னும் பெரிதாக சாதிக்க ஆசை. ரமே‘ திலக்கின் பெரிய ரசிகன் நான். எம்.எஸ். பாஸ்கர் போலவே ரமேஷ்‘ திலக்கும் தேசிய விருது பெற வேண்டும். தேஜூவுக்கும் படக்குழுவினருக்கும் வாழ்த்துக்கள்”.

**தயாரிப்பாளர், விநியோகஸ்தகர் தனஞ்செயன்,** “சில காரணங்களால் இந்தப் படம் தள்ளிப் போனது. பின்பு நான் படம் பார்த்தபோது எனக்கு ரொம்ப பிடித்திருந்தது. கதையில் எல்லோருக்கும் முக்கியத்துவம் இருக்கும். இயக்குநர் மாறனுக்கு வாழ்த்துக்கள். படம் பார்த்து முடித்ததும் நல்ல படம் பார்த்த திருப்தி கிடைக்கும். எப்படி பிளாக்மெயில் செய்கிறார்கள், எப்படி கடத்துகிறார்கள் என பல லேயர்களில் கதை செல்லும். லிங்கா, பிந்து மாதவி, தேஜூ, ரமேஷ்‘ திலக், முத்துக்குமார் என அனைவரும் சிறப்பாக நடித்துள்ளனர். யதார்த்தமாக நமது வாழ்வில் நடக்கும் வி‘யங்களை வைத்து நல்ல த்ரில்லர் படம் கொடுத்துள்ளார் மாறன். அமல்ராஜ் சாருக்கு 12ஆம் தேதி நல்ல வெற்றி கிடைக்கும். உங்களுக்கும் படம் பிடிக்கும் என நம்புகிறேன். மாறன் பொறுப்புணர்ச்சியோடு ஒரு படம் கொடுத்திருக்கிறார். சினிமா சுற்றி பல நெகட்டிவான வி‘யங்கள் நடந்து வருகிறது. நல்ல படங்கள் வரும்போது அதை கெடுக்க வேண்டும் என பல வி‘யங்கள் செய்கிறார்கள். அதை எல்லாம் தாண்டிதான் ஒரு படம் ஜெயிக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால், சினிமாவை மிஸ்யூஸ் செய்யாதீர்கள். நல்ல சினிமாவிற்கு எப்போதும் ஆதரவு கொடுங்கள். இது எனது தனிப்பட்ட

கருத்துதான். இசையமைப்பாளராக ஜிவி பிரகாஷை‘ நெருங்குவது கடினம். ஆனால், நடிகராக அவரை அணுகுவது எளிது. சம்பளமே வாங்காமல் கூட நடிப்பார். ஏனெனில், நடிப்பது அவருக்கு பிடிக்கும். தமிழ் சினிமாவிற்கு கிடைத்த பொக்கி‘ம் ஜிவி பிரகா‘. இந்தத் திரைப்படம் மிகப்பெரிய வெற்றியாக மாற வேண்டும்” என்றார்.

**ஜின்மா எண்டர்டெயின்மென்ட் சத்யபிரகாஷ்‘,** “இந்த சந்தோஷமான குடும்பத்தில் எங்களையும் இணைத்த தனஞ்செயன் சாருக்கு நன்றி. மாறன் அருமையாக படத்தை கொண்டு வந்துள்ளார். வாழ்த்துக்கள்”.

**இயக்குநர் மு. மாறன்,** “தயாரிப்பாளர் எனக்குக் கொடுத்த ஒத்துழைப்பு மகத்தானது. இவரைப் போல ஒரு தயாரிப்பாளர் கிடைப்பது கஷ்‘டம். இந்தப் படம் வெற்றியடைந்து அவர் அடுத்தடுத்து படங்கள் தயாரிக்க வேண்டும். இதுபோன்ற ஒரு இக்கட்டான சூழலில் தனஞ்செயன் சார் மாதிரியான ஒருத்தர் கைக்கொடுத்தது பெரிய விஷயம். சரியான படங்களையும் திறமையாளர்களையும் வெளிச்சம் போட்டு காட்டுவார். அவர் எங்கள் படத்திற்கு கொடுத்த ஆதரவிற்கு நன்றி. படக்குழுவினர் அனைவரின் ஒத்துழைப்பிற்கும் நன்றி. ஜிவி பிரகாஷ்‘ சாருடன் அடுத்தடுத்து படங்கள் செய்ய வேண்டும் என எனக்கும் ஆசை இருக்கிறது. உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை”.

**நடிகர் ஜிவி பிரகாஷ்**‘, “படக்குழுவினர் அனைவரும் சின்சியராக வேலை பார்த்துள்ளார்கள். நல்ல படத்தை மாறன் கொடுத்துள்ளார். படம் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. உங்களை கட்டிப்போடும் த்ரில்லராக படம் இருக்கும். இந்தப் படம் தயாரிப்பாளருக்கு லாபகரமானதாக அமைய வேண்டும். எங்கள் படத்திற்கு ஆதரவு கொடுத்த தனஞ்செயன் சாருக்கும் நன்றி. ரமேஷ்‘ சார், முத்துக்குமார் சார், தேஜு, லிங்கா மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துக்கள். இடைவேளைக்கு முன்பு வரும் 40 நிமிடங்கள் நிச்சயம் உங்களுக்கு பிடிக்கும். படம் பார்த்துவிட்டு சொல்லுங்கள்”

**எக்ஸிகியூடிவ் புரொடியூசர் தயாளன் பழனி**, “தனஞ்செயன் சாரை நம்பி நாங்கள் படத்தை ஒப்படைத்து விட்டோம். அனைவருக்கும் நன்றி”.

**பௌர்ணமி**

நீல நிற ஆடை கட்டி...
வெண்மேக பூச்சூடி...
நட்சத்திர நகைகள் பூட்டிய
வான் மகளின் பேரழகி...
பார்க்க கண்கள் கொள்ளுதடி...
உந்தன் அழகில் மயங்கியே
மனம் பித்தாகி நிற்கின்றேன்...
பிரகாசிக்கும் ஒளியில்
எந்தன் முகமும்
சிவந்தே போகின்றது...
தங்கத் தாரகையாய்
தரணியைக் காண உலா வரும்
விண்ணவளின் திலகமெனும்
பௌர்ணமி நிலவு...

- கவிஞர் கா.கலைச்செல்வி,
மாரப்பம்பாளையம் புதூர்,
திருச்செங்கோடு.




# குறைந்த விலையில்

ஸ்ரீ பச்சையம்மன் துணை...

அரங்கூர் ஏரோபிளேன்


# S.R.நகர்

## (சுசீலா – இராமசாமி)

தொழுதூர் To திட்டக்குடி ரோடு, பெரங்கியம் கிராமம்

APPROVED RERA & DTCP APPROVED

அரசு அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவு




| Plot No | Sq.ft | Cent |
|---|---|---|
| 1 | 1611.77 | 3.70 |
| 2 | 1247.50 | 2.86 |
| 3 | 1247.50 | 2.86 |
| 4 | 1247.50 | 2.86 |
| 5 | 1252.49 | 2.87 |
| 6 | 1444.74 | 3.31 |
| 7 | 1477.05 | 3.39 |
| 8 | 1421.15 | 3.26 |
| 9 | 1453.59 | 3.33 |
| 10 | 1497.00 | 3.43 |
| 11 | 1528.19 | 3.51 |
| 12 | 1553.14 | 3.56 |
| 13 | 1550.55 | 3.56 |
| 14 | 900.09 | 2.06 |
| 15 | 975.14 | 2.24 |
| 16 | 1040.40 | 2.39 |
| 17 | 1440.18 | 3.30 |
| 18 | 951.56 | 2.18 |
| 19 | 1011.40 | 2.32 |
| 20 | 1315.78 | 3.02 |
| 21 | 1325.30 | 3.04 |
| 22 | 1512.50 | 3.47 |
| 23 | 1516.96 | 3.48 |
| 24 | 1521.06 | 3.49 |
| 25 | 1729.00 | 3.97 |
| 26 | 1772.50 | 4.07 |
| 27 | 1796.25 | 4.12 |
| 28 | 1833.56 | 4.21 |
| 29 | 1869.50 | 4.29 |
| 30 | 1704.48 | 3.91 |
| 31 | 1611.50 | 3.70 |
| 32 | 1588.60 | 3.64 |
| 33 | 1593.80 | 3.66 |
| 34 | 1573.00 | 3.61 |
| 35 | 1560.00 | 3.58 |
| 36 | 1381.80 | 3.17 |
| 37 | 1442.24 | 3.31 |
| 38 | 1232.50 | 2.83 |
| 39 | 1237.50 | 2.84 |
| 40 | 1237.50 | 2.84 |
| 41 | 1235.00 | 2.83 |
| 42 | 1428.25 | 3.28 |
| TOTAL | 59869.49 | 137.32 |

தொடர்புக்கு : 7358310286 R.நவீன் ராமசாமி

# அகல் விளக்கு (சிறுகதை)

- கா.கலைச்செல்வி,



அந்திசாயும் நேரத்தில் வீட்டின் முற்றத்தில் அழகான கோலம் போட்டு அதன் நடுவில் சாணத்தை தட்டி வைத்து அதன் மேல் அகல் விளக்கினை ஏற்றி வைத்தாள் கலா. வீடே இலட்சுமி கடாட்சமாய் இருந்தது.

கலா இந்த வீட்டிற்கு வந்து இன்றோடு ஒரு வாரம் தான் ஆகிறது. வந்ததிலிருந்து ஓயாமல் ஏதாவது வேலை செய்து கொண்டே இருக்கிறாள். அந்த வீட்டு முதலாளி அம்மாவும் கலாவிடம் கொஞ்ச நேரம் ஓய்வெடு, பிறகு வேலை செய்யலாம் என்று எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் உறங்கும் நேரத்தைத் தவிர ஏதாவது செய்து கொண்டே இருக்கிறாள்.

கலா கொஞ்சம் பூ மாலை வாங்கிட்டு வா நான் கோயிலுக்கு போய்ட்டு வரேன் என்று முதலாளி அம்மா சொன்னதால் மாலை வாங்க வெளியே சென்றாள் கலா. அந்த நேரத்தில் வீட்டின் வாசலில் சொகுசான கார் வந்து நின்றது. அதிலிருந்து மாடர்ன் பெண்ணொருத்தி இறங்கினாள்.

அவள் தான் இந்த சாம்ராஜ்ஜியத்தின் இளவரசி. கார் வரும் சத்தம் கேட்டு வீட்டில் இருந்தவர்கள் அனைவரும் ஓடோடி வந்தார்கள்.

வாங்க அம்மா, வாங்க என்று அனைவரும் கைகூப்பி வணங்கினார்கள். அவள் யாரையும் சட்டை செய்யாமல் தன் செல்லப்பிராணி விக்கியை கொஞ்ச அதன் அருகில் சென்றாள். அப்போது அவள் கோலத்தின் மீதிருந்த அகல் விளக்கினை தனது செருப்பு கால்களால் தட்டி விட்டாள்.

அகல் விளக்கு அணைந்து எண்ணெய் எல்லாம் கீழே ஊற்றி விட்டது. இதை மாடர்ன் பெண், அறிவு இருக்கா இல்லையா இப்படி வாசலில் இதை வைத்து இருக்கீங்க முட்டாள் தனமா செய்யாதீர்கள் என்று கோபமாக கத்தினாள்.

அனைவரும் தலை குனிந்து ஏதும் சொல்லாமல் நின்றனர்.

எல்லாருக்கும் காது என்ன செவிடா, யார் செய்த வேலை இது. இப்போதே கிளம்புங்க ஒரு நிமிடம் கூட இங்கு இருக்கக் கூடாது.

அனைவரும் அமைதியாக நிற்க, ஒழுங்கு மரியாதையா சொல்லிடுங்க, இல்லன்னா எல்லாரும் வெளியே கிளம்புங்க. என்று ஆவேசகமாக கத்திக் கொண்டே, தனது அம்மா விஜயாவை பார்த்து, இந்த வேலையை யார் செய்திருந்தாலும் உடனே இப்போதே வெளியே அனுப்பிடு என்று தன் அம்மாவிடம் சத்தம் போடவும் கலா வீட்டின் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது. ஏய் எதற்காக இப்படி வந்ததும் வராததுமா குதிக்கற என்று விஜயா கேட்டாள்.

சொல்லுமா நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்லு. வீடு முழுக்க எவ்வளவு காஸ்ட்லியான லைட் இருக்குது, அதை எல்லாம் போடாமல் கேவலமா இந்த அகல் விளக்கை வீட்டுக்கு நடுவுல வைச்சி இருக்கீங்க.

ஏய் இதை முதலில் க்ளீன் பண்ணு என்று அதட்டினாள்.

வீட்டில் அனைத்து மின் விளக்குகளையும் எரிய வைத்தாள். இப்போது பாருங்கள் எப்படி வீடே ஜொலிக்கிறது. இனி இதைப் போல் செய்தால் அவ்வளவு தான் என்று கூறி உள்ளே சென்றாள்.

கலா மாலையை வைத்து விட்டு அகல் விளக்கை எடுத்து தான் தங்கியிருந்த வீட்டின் வாசலில் வைத்தாள்.

கலா நீ எதுவும் நினைக்காதம்மா இவள் இப்படி தான். ஒரே பொண்ணுன்னு செல்லம் அதிகம் கொடுத்து கெடுத்து வளர்த்துட்டோம், என்க.

பரவாயில்லைங்கம்மா நான் இங்கே இதை வைச்சி இருக்கக் கூடாது. என்று சொல்லி விட்டு அவள் தங்கியிருந்த வீட்டிற்கு வந்தவள்.

அங்கு இருந்த அகல் விளக்குகளை எடுத்து அனைத்தையும் அழகாக வைத்து தீபம் ஏற்றினாள். கலா அனைத்து அகல் விளக்குகளையும் ஏற்றி முடிக்கவும், கரண்ட் கட் ஆகவும் சரியாக இருந்தது.

கலாவின் வீடு ஜெக ஜோதியாக இருந்தது. இவளின் முதலாளி வீட்டில் இருள் படர்ந்தது.

மின் கம்பங்கள் பழுதாகி விட்டதால் இன்னும் மூன்று நாளாகும் மின்சாரத்தை சரி செய்ய என்று சொல்லி விட்டார்கள்.

மார்டன் பொண்ணுக்கு மின்சாரம் இல்லாமல் எதுவும் ஓடாது மொட்டை மாடியில் இருந்து பார்த்தாள்.

கலாவின் வீடு மிகவும் பிரகாசமாக இருப்பதைப் பார்த்து தன் அறிவை நினைத்து வெட்கப்பட்டாள்.

உடனே கீழே வந்து கலாவிடம் மன்னிப்பு கேட்டாள். அறியாமல் நான் தான் தவறு செய்து விட்டேன் அங்கு வந்து அகல் விளக்கை ஏற்றி வையுங்கள் என்று கலாவின் கையைப் பிடித்து கேட்டாள்.

கலாவும் அகல் விளக்கை ஏற்றி வைத்தாள்.அறியாமை என்னும் இருளைப் போக்கி.

கட்டுரை:

## “ரூபாய்“ என்ற சொல், கடந்து வந்த பாதை!

- பாப்பனப்பட்டு வ.முருகன்

இந்திய ரூபாய், உலகின் பழமையான நாணய முறைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் பெயர், “ரூபியா“ என்ற சமஸ்கிருத வார்த்தையிலிருந்து உருவானது. இதன் பொருள், “வெள்ளி“ என்பதாகும்.

காலப்போக்கில், இந்திய ரூபாயின் பயன்பாடு, மதிப்பு மற்றும் அதன் பெயர் எழுதப்படும் விதம், பல்வேறு மாற்றங்களைச் சந்தித்துள்ளது.

இந்தியாவின் பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார பரிணாமத்தைப் பிரதிபலிக்கும் வகையில், பல வடிவங்களில் ரூபாய் புழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

பண்டைய இந்தியாவில், “ரூபாய்“ என்ற சொல், முதன் முதலில் வெள்ளி நாணயங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. கி.மு. 6ம் நூற்றாண்டில், மௌரியப் பேரரசு காலத்தில், “ரூப“ அல்லது “ரூபியா“ என்று அழைக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன.

இவை பெரும்பாலும், தமிழ், பிராகிருதம் மற்றும் சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் எழுதப்பட்டன.

தமிழில், “ரூபம்“ என்று குறிப்பிடப்பட்டு, பின்னர், “ரூபாய்“ என்று பரிணமித்தது. இந்த நாணயங்கள் மீது, அரசர்களின் பெயர்கள் அல்லது சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

மத்திய காலத்தில், இந்தியாவில், இஸ்லாமிய ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வந்த போது, “ரூபாய்“ என்ற சொல், பாரசீக மற்றும் அரபு மொழிகளின் தாக்கத்தால் மாற்றம் கண்டது.

டெல்லி சுல்தானிய ஆட்சியில் (13-16ம் நூற்றாண்டு), ரூபாய், “ரூபியா“ என்று புழக்கத்தில் இருந்தது.

முகலாய பேரரசு காலத்தில், பேரரசர் ெ'ர்'ா சூரி (1540-1545) முதன்முதலில், “ரூபியா“ என்ற பெயரில், தரப்படுத்தப்பட்ட வெள்ளி நாணயத்தை அறிமுகப்படுத்தினார். இது 11.6 கிராம் எடையுள்ள தூய வெள்ளியால் ஆனது.

இந்த நாணயங்கள் மீது, பாரசீக எழுத்துக்களில், “ரூபியா“ என்று பொறிக்கப்பட்டிருந்தது. இது இந்திய ரூபாயின்



நவீன வடிவத்திற்கு அடித்தளமாக அமைந்தது.

ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி, 17ம் நூற்றாண்டில், இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய போது, “ரூபாய்“ என்ற சொல் ஆங்கிலத்தில், “சுரிநந“ என்று மாற்றமடைந்தது. இது, பிரிட்டி' ஆட்சியின் கீழ் அதிகாரப்பூர்வ நாணயமாக மாறியது.

19ம் நூற்றாண்டில், “ரூபாய்“ நாணயங்கள் மீது, “ சுரிநந“ என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, உள்ள□ர் மொழிகளிலும் பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக, தமிழில், “ரூபாய்“, இந்தியில், “ரூபயா“, பெங்காலியில், “ரூபி“ என்று, வெவ்வேறு மொழிகளில் எழுதப்பட்டது.

1835ல், பிரிட்டி' அரசு, ரூபாயை ஒரே சீரான நாணயமாக அறிவித்து, அதன் மதிப்பை வெள்ளியுடன் இணைத்தது.

1947ல் இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, இந்தியாவின் அதிகாரப்பூர்வ நாணயமாக, “ரூபாய்“ தொடர்ந்தது.

இந்திய அரசியலமைப்பு, பல மொழிகளை அங்கீகரித்ததால், “ரூபாய்“ பல மொழிகளில் எழுதப்பட்டது.

1950களில், ரூபாய் நோட்டுகளில், “ரூபாய்“ (தமிழ்), ' (இந்தி), “சுரிநந“ (ஆங்கிலம்) என்று, பல மொழிகளில் அச்சிடப்பட்டது.

2010ல், இந்திய ரூபாய்க்கு, ஒரு புதிய சின்னம், **'₹“** அறிமுகப்படுத்தப்பட்டது. இது, தேவநாகரி, '□' மற்றும் ரோமன், “சு“ ஆகியவற்றின் கலவையாக உருவாக்கப்பட்டு, இந்திய ரூபாயின் உலகளாவிய அடையாளமாக மாறியது.

டிஜிட்டல் யுகத்தில், “ரூபாய்“ என்ற சொல், பல்வேறு தளங்களில் பயன்படுத்தப்படுகிறது. ஆன்லைன் பரிவர்த்தனைகளில், **“₹'** சின்னம் பரவலாக உள்ளது. மேலும், “ஐசேு“ (ஐனெயைெ சுரிநந) என்ற சுருக்கம், சர்வதேச அளவில் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ், இந்தி, கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில், “ரூபாய்“ தொடர்ந்து எழுதப்படுகிறது.

இன்று, ரூபாய் நோட்டுகளில், 17 இந்திய மொழிகளில், அதன் பெயர் அச்சிடப்படுகிறது. இது, இந்தியாவின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கிறது.




ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன், ருக்மணி வசந்த், வித்யுத் ஜம்வால், பிஜு மேனன், 'பீர் கல்லரக்கல், விக்ராந்த் மற்றும் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் மதராஸி. இசை : அனிருத் ஒளிப்பதிவு : சுதீப் இளமோன்

கதை

தமிழகத்தில் ஊடுருவும் துப்பாக்கி கலாசாரத்தை வேரறுக்கும் கதை.

தமிழக மகாகளிடையே துப்பாக்கி கலாசாரத்தை புகுத்தும் நோக்கில் வட இந்தியாவில் இருந்து ஆறு கண்டெய்னர்களில் துப்பாக்கிகளை வித்யூத் ஜம்வாலும், 'பீர் கல்லரக்கலும் ("சார்பட்டா பரம்பரை" படத்தில் டான்சிங் ரோஸ் கதாபாத்திரத்தில் நடித்தவர்) கொண்டு வருகிறார்கள். அதை தடுத்து நிறுத்த போலீசார் முயற்சித்தும், அவர்களை மீறி துப்பாக்கிகளை சென்னைக்கு கொண்டு வந்து ஒரு தொழிற்சாலையில் துப்பாக்கிகளை பதுக்கி வைக்கிறார்கள். இதற்கிடையில் காதல் தோல்வியில் தற்கொலைக்கு முயற்சிக்கும் சிவகார்த்திகேயனை வைத்து அந்த துப்பாக்கிகளை அழிக்க போலீஸ் அதிகாரி பிஜு மேனன் முடிவு செய்கிறார். அதன்படி அந்த தொழிற்சாலைக்குள் சாதாரண தொழிலாளியாக சிவகார்த்திகேயன் நுழைகிறார். இதற்கிடையில் சிவகார்த்திகேயன் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்ற உண்மை போலீசாருக்கு தெரிய வருகிறது. தொழிற்சாலைக்கு செல்லும் சிவகார்த்திகேயன் வில்லன்களை கண்டும் அவர்களை கொலை செய்ய தயங்குகிறார். அதன் பிறகு என்ன ஆனது? பதுக்கி வைத்த துப்பாக்கிகளை சிவகார்த்திகேயன் அழித்தாரா? இல்லையா? அவரது காதல் வெற்றிபெற்றதா? சிவகார்த்திகேயன் எதனால் மனநலம் பாதிக்கப்பட்டார்? மனநலத்தில் இருந்து குணமடைந்தாரா? இதற்கெல்லாம் விடை சொல்வதே படத்தின் மீதிக்கதை

சிவகார்த்திகேயன். சண்டைக் காட்சிகளிலும் நடனத்திலும் நடிப்பிலும் நன்றாகவே ஸ்கோர் செய்திருக்கிறார். அவரது காதலியாக ருக்மணி வசந்த் சிறப்பாகவே நடித்துள்ளார். வில்லன்களாக வித்யூத் ஜம்வால், 'பீர் கல்லரக்கல் மிரட்டியுள்ளனர். பிஜு மேனன், விக்ராந்த் என இதில் நடித்திருக்கும் அனைவரும் அவரவர் கதாபாத்தரம் உணர்ந்து சிறப்பாக நடித்துள்ளனர். சுதீப் இளமோன் ஒளிப்பதிவு படத்திற்கு பெரிய பலம். அனிருத்தின் பாடல்கள் இசையும் பின்னணி இசையும் படத்திற்கு வலு சேர்த்துள்ளது.

இயக்குநர் AR முருகதாஸ் துப்பாக்கி மாதிரி ஆக்ஷன் கதையை ரசிக்கும்படி கொடுக்க முயற்சித்துள்ளார். ஆனால் சண்டைக்காட்சிகள் மட்டுமே ரசிக்கமுடிகிறது. திரைக்கதையில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். பாராட்டுக்கள்.




ஷெரீ.்.ப் இயக்கத்தில் கலக்கப் போவது யாரு பாலா நமீதா, பாலாஜி சக்திவேல், அர்ச்சனா மற்றும் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் காந்தி கண்ணாடி.

கதை

ஜமீனாக வாழ்ந்த காந்தி, காதலி கண்ணம்மாவுக்காக சொத்து சுகத்தை விட்டுவிட்டு ஊரிலிருந்து வெளியூர் வந்து வாழ்கிறார். வாட்ச்மேனாக வேலை பார்க்கிறார். பெரிய ஆசைகள் இல்லாமல் மனைவியுடன் நடுத்தர வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். ஒரு திருமண விழாவில் தன் மனைவி நமக்கும் பிள்ளைகள் இருந்திருந்தால் நமக்கும் அறுபதாம் கல்யாணம் இதுமாதிரி தடபுடலாக

நடத்தியிருப்பார்கள் என்று சொல்ல காதல் மனைவியின் 60 ஆம் கல்யாணம் ஆசையை நிறைவேற்ற கதாநாயகனான பாலாவை சந்திக்கிறார். காந்தியின் விருப்பங்களை கணக்குப் போட்டு பார்த்து பல லட்சங்கள் ஆகும் என்று பாலா சொல்ல அந்த பணத்திற்கு அவர் என்ன செய்தார்? அறுபதாம் கல்யாணம் நடந்ததா? இல்லையா? என்பதுதான் படத்தின் மீதிக்கதை.

ஈவெண்ட் மேனேஜ்மெண்ட் கம்பெனி நடத்தும் கதாபாத்திரத்தில் இயல்பான நடிப்புடன், டைமிங் காமெடிகள், நட்புக்கு உதவும் குணம், பணத்திற்காக அலையும் கேரக்டர், காதலிக்காக எதையும் செய்யமுடியாத எதார்த்தம் என பாலா நடிப்பில் அசத்தியிருக்கிறார். கதை தேர்வில் கவனம் செலுத்தினால் பிரகாசமாக வருவார். கதாநாயகியாக நமிதா கிருஷ்ண மூர்த்தி கொடுத்த கேரக்டரை சிறப்பாக செய்த்ள்ளார். காந்தி கண்ணாடியில் பாலாஜி சக்திவேலும் அர்ச்சனாவும் நல்ல கணவன் மனைவியாக போட்டி போட்டுக்கொண்டு நன்றாக நடித்திருக்கிறார்கள். மனோஜ், ஆராதியா, ஜீவா சுப்ரமணியம், மதன்கோபால், ரிட்டுசாரா, அமுதவானன், நிகிலாசங்கர் ஏன இதில் நடித்திருக்கும் அனைவரும் அவரவர் கதாபாத்திரம் உணர்ந்து சிறப்பாக நடித்துள்ளனர். இயக்குநர். விவேக் - மெர்வின் இருவரது இசையில் பாடல்களும் பிண்ணனி இசையும் படத்திற்கு பலமாக இருக்கிறது. பாலாஜி மு ராஜாவின் ஒளிப்பதிவு அருமை.

இயக்குநர் ஷெரிப் உணர்வுப்பூர்வமான கதையை சொல்ல முயற்சித்தற்கு பாராட்டுக்கள். திரைக்கதையில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.




வெற்றிமாறன் தயாரிக்க, அனுராக் உடன் இணைந்து வழங்கி அறிமுக இயக்குநர் வர்ஷா பரத் இயக்கத்தில் அஞ்சலி சிவராமன், சாந்தி பிரியா, ஹ்ருது ஹாரூன், சஷாங்க் பொம்மிரெட்டிப்பள்ளி ,தீஜய் அருணாசலம், சரணயா ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் பேட்கேர்ள்

கதை

ரம்யா படிப்பு வரவில்லை, பள்ளி பருவத்திலேயே தன் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவனுடன் காதல், ஆரம்பத்தில் நன்றாக சென்றாலும், இது பெற்றோர்களுக்கு தெரிந்து வழக்கம் போல் காதலுக்கு முட்டுக்கட்டை வருகிறது. அம்மா, ரம்யாவை புதிய ஸ்கூலில் சேர்க்க, அங்கு அவர் முதல் நாள் செல்லும் போதே இந்த ஸ்கூல் வரைக்கு தான் உன் பேச்சை எல்லாம் கேட்பேன், கல்லூரியில் என் இ‘டம் எனக்கு பிடித்ததை செய்வேன், உனக்கு பிடிக்காததையும் செய்வேன் என்று செல்கிறார். அதற்கு தகுந்தது போலவே அங்கு ஒரு பையனுடன் கட்டில் வரை அவர்கள் உறவு இருக்க அந்த பையனோ சீனியர், கல்லூரி முடிந்து ரம்யாவை கழட்டி விட பார்க்கிறான்.

இதை அறியாத ரம்யா அவனிடம் வழிந்து வழிந்து பேச ஒரு கட்டத்தில் மருத்துவமனையில் அட்மிட் ஆகும் நிலைக்கு செல்ல, பிறகு இருவருக்கும் கடும் மோதல் வர, ரம்யா தன் காதலை அதுவும் சரியான காதலை கண்டுப்பிடித்தாளா? முடிவில் அவள் வாழ்க்கை என்ன ஆனது என்பதே படத்தின் மீதிக்கதை.

அஞ்சலி சிவராமன் கொடுத்த கதாபாத்திரத்தே சிறப்பாக செய்துள்ளார். அம்மாவாக சாந்தி பிரியா சிறப்பாக நடித்துள்ளார். காதலனாக ஹ்ருது ஹாரூன் நன்றாக நடித்துள்ளார். மற்றும் ச‘ாங்க் பொம்மிரெட்டிப்பள்ளி ,தீஜய் அருணாசலம், சரணயா ரவிச்சந்திரன் என இதில் நடித்திருக்கும் அனைவரும் அவரவர் கதாபாத்திரம் உணர்ந்து சிறப்பாக நடித்துள்ளனர். பிரின்ஸ் ஆண்டர்சன் மற்றும் ப்ரீதா ஜெயராமன் என மூன்று ஒளிப்பதிவாளர்களின் ஒளிப்பதிவும் அருமை. அமித் திருவேதியின் இசையில் படல்களும் பிண்ணனி இசையும் ரசிக்கவைக்கிறது.

ஒரு பெண் தனது டீன் ஏஜில் இருந்தே சுதந்திரமாக வாழ ஆசைப்படுகிறார். அதற்கு அவரது குடும்பமும் இந்த சமூகமும் எப்படி எல்லாம் தடைகள் விதிக்கிறார்கள், அந்த தடைகளை எல்லாம் அவர் எப்படி உடைக்கிறார் என்பது போல வழக்கமான திரைக்கதையில் காட்டாமல், தனக்கான சுதந்திரத்தை தான் அடைய வேண்டும் என்றால் தனது சுதந்திரத்திற்கு கட்டுப்பாடுகள் விதிப்பவர்களைக் விட்டு விட்டு வெளியேற வேண்டும் என முடிவெடுத்து வெளியேறுவதை படத்தின் முதல் ∴பேர்மில் இருந்து கடைசி ‘ாட் வரை ஒரு பெண்ணின் உலகத்தை, மனதை அப்பட்டமாக காட்டியுள்ளார். மொத்த படத்தையும் பெண்ணின் பார்வையில் இருந்து ரசிக்கும்படி சொல்லியிருக்கிறார். இயக்குநர் வர்ஷா. பாராட்டுக்கள்.

சிறுகதை:

## மயூரி தந்த புரிதல்!

- எஸ்.விஜயன்



வெயிலின் உக்கிரம் தணிந்து, மாலைப் பொழுது குளிர்ந்து கொண்டிருந்தது. ஊருக்கு ஒதுக்குப்புறமாக, பசுமையால் சூழப்பட்ட ஒரு 1,200 சதுர அடி நிலத்தில், கலைநயத்துடன் கட்டப்பட்டிருந்தது, அர்ஜுனின் வீடு.

நவீன வடிவமைப்பு, கண்ணாடி ஜன்னல்கள், மேற்கூரையில் சிறிய தோட்டம் என, வெளியில் இருந்து பார்க்கையில், வீடு ஒரு சிறிய கோட்டை போல தோற்றமளித்தது.

அர்ஜுன், ஒரு பன்னாட்டு மென்பொருள் நிறுவனத்தில் மூத்த மேலாளர். தன் கனவு வீட்டை, தன் குழுவில் உள்ள சக ஊழியரான மயூரிக்கு காண்பிக்க, அவளை அழைத்து வந்திருந்தான்.

"மயூரி, உள்ளே வா... இதுதான் என் கனவு வீடு" என்று புன்னகையுடன் கூறினான் அர்ஜுன்.

அவன் குரலில் பெருமிதமும், மறைமுகமான எதிர்பார்ப்பும் தொனித்தது.

மயூரி, அவனுடைய குழுவில் மிகவும் திறமையானவள். அவளுடைய நேர்மையான பேச்சும், புதிய யோசனைகளும், அர்ஜுனுக்கு எப்போதும் பிடித்திருந்தன. ஆனால், இன்று அவளை அழைத்து வந்ததற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது.

அவன் மனதில் மயூரி மீது தோன்றியிருந்த உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என்பது.

வீட்டின் உள்ளே நுழைந்ததும், மயூரி ஆச்சரியத்துடன் சுற்றிப் பார்த்தாள். விசாலமான லிவிங் ரூம், மரத்தாலான தளவாடங்கள், ஒவ்வொரு மூலையிலும் கவனமாக வைக்கப்பட்டிருந்த அலங்காரப் பொருட்கள், ல்லாமே ஒரு திட்டமிடப்பட்ட அழகை பிரதிபலித்தன.

"அர்ஜுன், இந்த வீடு அழகா இருக்கு! எப்படி இவ்வளவு பக்காவா பிளான் பண்ணி கட்டினே?" என்று கேட்டாள் மயூரி, உண்மையான ஆர்வத்துடன்.

அர்ஜுன் சிரித்தான். "இது வெறும் வீடு இல்ல, மயூரி. இது ஒரு திட்டம். வாழ்க்கையை எப்படி வாழணும்னு நான் நினைச்சதை இந்த வீடு காட்டுது."

அவன் தொடர்ந்து பேசினான். "இந்த வீடு 60 லட்சத்துல கட்டி முடிச்சேன். 30 லட்சம் என் சேமிப்பு, மீதி வங்கிக் கடன். மாதம் முப்பதாயிரம் நுஆஜ. ஆனா, எந்த ரிஸ்க்குக்கும் இடமில்ல. வங்கி கடனுக்கு இணையாக ஒரு காப்பீட்டு திட்டம் எடுத்திருக்கேன். எனக்கு ஏதாவது ஆனாலும், கடன் முழுசா அடைஞ்சிடும்."

மயூரி புருவத்தை உயர்த்தினாள். "அட, இவ்வளவு தூரம் யோசிச்சு வச்சிருக்கியா?"

"அதுதான் என் ஸ்டைல்" என்று கண்ணடித்தான் அர்ஜுன்.

"இந்த வீடு கார்னர் பிளாட். மூணு பக்கமும் நுழைவு வாசல். ஒரு வாசல் பிரச்னை ஆனாலும், மத்த வழியா உள்ளே வரலாம். பாது காப்புக்கு ஊஊவுஏ, அலாரம் சிஸ்டம், கிரில் கேட்ஸ் எல்லாம் இருக்கு. தண்ணீர்? போர்வெல், கார்பரேஷன் இணைப்பு, கிணறுன்னு, மூணு ஆப்ஷன்ஸ். குடிக்க ருஏ-சுழு வாட்டர் ப்யூரி.ஃபையர். அது கெட்டுப் போனாலும், ஒரு கூடுதல் வாட்டர் ஹீட்டர் இருக்கு."

மயூரி சிரித்தாள். "நீ வேற லெவல், அர்ஜுன்! எல்லாத்துக்கும் ஒரு பேக்அப் வச்சிருக்கே."

"இன்னும் முடியல" என்று ஆர்வமாக தொடர்ந்தான். "கரெண்ட் போனா இன்வர்ட்டர், ஜெனரேட்டர், சோலார் பேனல்னு, மூணு ஆப்'ன்ஸ். பேட்டரியில் ஓடுற ஃபேன், டியூப்லைட், லேப்டாப் எல்லாம் இருக்கு. மொபைலில் 5பு இன்டர்நெட் வேற. மொட்டை மாடியில் கெமிக்கல் கோட்டிங் டைல்ஸ், வெயில் தாக்கம் குறைய. மாடி தோட்டம், ஏசி, ஏர்கூலர்னு, எல்லாமே பிளான் பண்ணி வச்சிருக்கேன்."

மயூரி மெதுவாக தலையசைத்தாள். "இவ்வளவு முன்யோசனையா? சமையலறை பத்தி சொல்லு, பார்க்கலாம்."

"ஹா! சமையலறையில் இரண்டு கேஸ் சிலிண்டர்கள், கேஸ் ஸ்டவ். கேஸ் தீர்ந்தா இன்டக்ஷன் ஸ்டவ் இருக்கு.

வெளியே போக ஒரு கார், மோட்டார் பைக், ஸ்கூட்டர், எல்லாம் ரெடி. வாழ்க்கையில் ரிஸ்க் எடுக்கவே கூடாது, மயூரி. எல்லாத்துக்கும் ஒரு ஸ்டெப்னி இருக்கணும்.”

மயூரி மௌனமாக அவனைப் பார்த்தாள். அவள் கண்களில் ஒரு விசித்திரமான புன்னகை தோன்றியது.

”அர்ஜுன், உன்னோட இந்த திட்டமிடல் எல்லாம் அருமை. ஆனா, ஒரு வி'யம் கேட்கணும். ஏன் இவ்வளவு பாதுகாப்பு, இவ்வளவு மாற்று ஏற்பாடு? இதுக்கு பின்னாடி என்ன இருக்கு?”

அர்ஜுன் ஒரு கணம் தயங்கினான். பின்னர், மெதுவாக பேசத் தொடங்கினான். ”மயூரி, நீ என் குழுவில் இருக்கும்போது, உன்னோட திறமையும், நேர்மையும் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. உன்கூட பேசும்போது, எனக்கு ஒரு இனம் புரியாத உணர்வு வருது. இந்த வீடு, இந்தத் திட்டங்கள், இதெல்லாம் ஒரு நல்ல வாழ்க்கையை உனக்கு கொடுக்க முடியும்னு காட்டணும்னு நினைச்சேன். உன்னை... உன்னை கல்யாணம் செய்யணும்னு ஆசைப்படுறேன்.”

மயூரி ஆச்சரியத்தில் உறைந்தாள். அவள் எதிர்பார்க்கவில்லை இந்த திசைமாற்றத்தை. ”அர்ஜுன்... இது திடீர்னு... கொஞ்சம் யோசிக்கணும். எனக்கு ரெண்டு மூணு நாள் டைம் கொடு” என்று மெதுவாக கூறினாள். அர்ஜுன் தலையசைத்தான். ”

நிச்சயமா, மயூரி. உன் முடிவுக்கு காத்திருக்கேன்.”
மயூரி மனதுக்குள் ஒரு புயல் வீசியது. அர்ஜுன் ஒரு நல்லவன், வசதியானவன், எதிர்காலத்தை திட்டமிடுபவன். ஆனால், அவள் மனதில் ஏதோ ஒரு உறுத்தல். அவளுக்கு இரண்டு தங்கைகள், அவர்களின் திருமணத்திற்காக காத்திருக்கும் ஒரு நடுத்தர குடும்பம்.

அவளுக்கு இந்தத் திருமணம் ஒரு வாய்ப்பாக இருக்கலாம். ஆனால், ஏன் இந்த தயக்கம்? மூன்று நாட்களுக்குப் பின், அலுவலகத்தில் மயூரி அர்ஜுனை சந்தித்தாள்.

”அர்ஜுன், உன் மேல எனக்கு எந்த கோபமும் இல்ல. ஆனா, இந்த திருமணத்துக்கு என்னால சம்மதிக்க முடியாது” என்று மென்மையாக கூறினாள்.
அர்ஜுன் அதிர்ச்சியடைந்தான். ”மயூரி, ஏன்? என்கிட்ட என்ன குறை? சொன்னா சரி செய்ய முயற்சிக்கிறேன்.”

மயூரி புன்னகைத்தாள். ”இது உன்னோட குறை இல்ல, அர்ஜுன். உன்னோட திட்டமிடல், உன்னோட பாதுகாப்பு ஏற்பாடுகள், இதெல்லாம் பார்க்கும் போது, நீ வாழ்க்கையை ஒரு செக்-லிஸ்ட் மாதிரி பாக்குறே. எல்லாத்துக்கும் ஒரு மாற்று, ஒரு ஸ்டெப்னி. ஆனா, வாழ்க்கை அப்படி இல்ல. வாழ்க்கைன்னா, எதிர்பாராத தருணங்கள், எதிர்பாராத சவால்கள். அதை எதிர்கொள்ளும்போது தான் அதோட அழகு தெரியும்.”

அவள் தொடர்ந்தாள். ”நீ என்னை கல்யாணம் செய்யணும்னு நினைச்சது, உன்னோட இந்த பாதுகாப்பான வாழ்க்கையை எனக்கு கொடுக்கணும்னு நினைச்சதெல்லாம் சரிதான். ஆனா, நான் விரும்புறது சுதந்திரமான வாழ்க்கை. எல்லாத்தையும் கணக்குப் போட்டு வாழுறது எனக்கு பிடிக்கலை. என் தங்கைகளோட எதிர்காலத்தைப் பத்தி நானும் யோசிக்கிறேன். ஆனா, அவங்களுக்கு நல்ல வாழ்க்கை கிடைக்கணும்னு நினைக்கிறவ, நானும் என் வாழ்க்கையை என் வழியில வாழணும்னு ஆசைப்படுறேன்.”

அர்ஜுன் அமைதியாக கேட்டான். ”மயூரி, நான் உன்னை கட்டுப்படுத்த முயற்சிக்கலை. உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை கொடுக்கணும்னு நினைச்சேன்.”
”நல்ல வாழ்க்கைன்னா என்ன, அர்ஜுன்? நீ திட்டமிடுற பாதுகாப்பு மட்டும் இல்லை. அது ஒரு உணர்வு, ஒரு பயணம். நீயும் ஒரு நல்ல மனுஷன்தான். ஆனா, எனக்கு வாழ்க்கையை ஒரு சாகசமா பாக்கணும். உனக்கு ஒரு அழகான, உன்னோட திட்டங்களுக்கு ஏத்த பொண்ணு நிச்சயம் கிடைப்பா” என்று கூறி, ஒரு புன்னகையுடன் நடந்து சென்றாள் மயூரி.

அர்ஜுன் திகைத்து நின்றான். அவன் வாழ்க்கையை ஒரு கோட்டையாக கட்டிக்கொண்டிருந்தான். ஆனால் மயூரியின் வார்த்தைகள், அவனுக்கு ஒரு புதிய புரிதலை கொடுத்தன.

வாழ்க்கையை திட்டமிடுவது முக்கியம், ஆனால், அதை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது. சில வி'யங்கள், பணத்தாலோ, திட்டங்களாலோ வாங்க முடியாது. அவை வாழ்க்கையின் அனுபவத்தில் தான் கிடைக்கின்றன.

# 2025 செப்டம்பர் மாத ராசி பலன்கள்


## மேஷம்

செப்டம்பர் மாதம் உங்களுக்கு உற்சாகமான மாதமாக இருக்கும். தொழிலில் முன்னேற்றத்துடன், சிலருக்கு புதிய பொறுப்புக்களும் அதிகரி-க்கும். வேலையை மாற்றும் எண்ணம் இருந்தால், இம்மாதம் சிறந்ததாக இருக்கும். ஆனால் குடும்ப மற்றும் வீட்டு வி'யங்களில் சற்று கவனமாக இருக்க வேண்டும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, மன அழுத்தம் அதிகரிக்கலாம். நிதி ரீதியாக சாதாரணமாக இருக்கும். தேவையற்ற செலவுகளை தவிர்க்க வேண்டும். நீண்ட காலம் கழித்து உங்களின் பழைய நண்பர்களை சந்திப்பீர்கள் மற்றும் புதிய நண்பர்களையும் பெறுவீர்கள். திருமணமாகாதவர்களுக்கு நல்ல வரன் கிடைக்கலாம்.



## ரிஷபம்

செப்டம்பர் மாதம் குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தவரை மகிழ்ச்சியாக இருக்கும். குடும்ப உறுப்பினர்களின் வெற்றியைக் கண்டு மகிழ்வீர்கள். நிதி நிலை மேம்படும். நீண்ட காலமாக நிலுவையில் இருந்த வேலைகள் வெற்றிகரமாக முடிவடையும். ஏற்கனவே செய்த முதலீடுகளில் இருந்து நல்ல பலன்கள் கிடைக்கும். பணியிடத்தில் சற்று கவனமாக இருக்க வேண்டும். யாருடனும் சண்டை இழுத்துவிடாதீர்கள். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, செரிமான பிரச்சனைகளால் அவதிப்பட நேரிடும்.



## மிதுனம்

செப்டம்பர் மாதத்தில் மிதுன ராசியை சேர்ந்தவர்களுக்கு பொன்னான பல வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் வேலை தொடர்பாக நிறைய பயணங்கள் செல்ல நேரிடும். அதன் மூலம் அனுகூலமான பலன்களும், லாபமும் அதிகரி-க்கும்.இந்த மாதத்தில் உங்களின் ஆற்றல் மற்றும் நேரத்தை சரியான விதத்தில் பயன்படுத்தினால் நீங்கள் எதிர்பார்த்ததை விட நல்ல வெற்றியைப் பெறலாம். இந்தக் காலத்தில் உங்களுக்கு பிடித்தமான சில நபர்களை சந்திக்க வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் ஆன்மீக நிகழ்வுகள் அல்லது சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வீட்டில் உறவினர்களின் வருகை மகிழ்ச்சியை அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பு தொடர்பாக சற்று சவால்களை சந்தித்தாலும் எதிர்பார்த்த வெற்றியை பெறலாம். உங்கள் வேலை, வியாபாரம் தொடர்பாக புத்திசாலித்தனம் செயல்படுவது அவசியம். இந்த மாதத்தில் உங்கள் வேலைகளை சரியான நேரத்தில் முடிக்க முடியும்.



## கடகம்

செப்டம்பர் மாதம் நம்பிக்கையை அதிகரிக்கும் மாதமாக இருக்கும். குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் முழு ஆதரவு கிடைக்கும். பணியிடத்தில் புதிய திட்டங்களில் பணிபுரியும் வாய்ப்புக்களைப் பெறுவீர்கள். கடின உழைப்புக்கான பலன் கிடைக்கும். நிதி நிலைமை வலுபெறும். முதலீடுகளில் இருந்து நல்ல லாபம் கிடைக்கும். இம்மாதத்தில் மிதமான உடற்பயிற்சியில் ஈடுபட்டு வந்தால், ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வேலை தொடர்பான பயணங்களை மேற்கொள்ள நேரிடும். இருப்பினும் பயணங்களின் போது எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தப்படுகிறது.



## சிம்மம்

செப்டம்பர் மாதம் கலவையான பலன்களைத் தரும் மாதமாக இருக்கும். பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரிடும். இருப்பினும் உங்களின் திறமை மற்றும் அனுபவத்தால் அவற்றை எளிதில் சமாளிப்பீர்கள். நிதி நிலை மேம்படும். இருப்பினும் செலவுகளைக் கட்டுப்படு-த்த வேண்டும். குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். குழந்தைகள் மற்றும் பெற்றோரின் முழு ஆதரவு கிடைக்கும். ஆரோக்கியத்தில் சற்று கவனமாக இருங்கள். இம்மாதத்தில் உங்களை சமூகத்தில் உயர்நிலைக்கு கொண்டு செல்லும் வகையில் புதிய தொடர்புகளும், வாய்ப்புகளும் கிடைக்கும்.



## கன்னி



செப்டம்பர் மாதத்தில் உங்களின் திட்டங்கள் அனைத்தும் நிறை வேறும். வேலை மற்றும் வணிகத்தில் சில முக்கியமான முடிவுகளை எடுப்பீர்கள். நிதி விஷ'யத்தில் புத்திசாலித் தனமாக முதலீடுகளை செய்வது நல்லது. குடும்பத்தினருடனான ஒருங்கிணைப்பும், புரிதலும் அதிகரிக்கும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, உடல் சோர்வு மற்றும் மன அழுத்தத்தைத் தவிர்க்க போதுமான தூக்கத்தை மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனத்தை செலுத்தினால், நல்ல வெற்றியைப் பெறலாம்.

## துலாம்



துலாம் ராசி சேர்ந்தவர்களு-க்கு அதிர்ஷ்'டமும் மகிழ்ச்சியும் நிறைந்த மாதமாக இருக்கும். இந்த மாதத்தில் உங்களின் நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் முழு ஆதரவை பெறுவீர்கள். அதனால் எந்த ஒரு கடினமான சூழலிலும் அவர்களின் முழு ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். உங்கள் வேலை இருந்த தடைகள் நீங்கும். மாதத்தின் நடுவில் அனைத்து வேலைகளையும் சரியான நேரத்தில் முடிக்க முடியும். உங்களின் செயலால் சாதனை மற்றும் மரியாதை அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்கள் மற்றும் வணிக வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் துறை ரீதியாக பெரிய அளவில் வாய்ப்புகளை பெறுவீர்கள். காதல் தொடர்பான விஷயத்தில் மிகவும் சாதகமான சூழல் நிலவும். உங்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்தவில்லை.

## விருச்சிகம்



விருச்சிக ராசியை சேர்ந்தவர்-களில் இந்த செப்டம்பர் மாதம் மங்களகரமான பலன்கள் கிடைக்கக்கூடியதாக இருக்கும். நீண்ட காலமாக நிலுவையில் இருந்த பணிகளை சரியாக முடிக்க முடியும். இதனால் மனதிருப்தி ஏற்படும். உங்கள் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். அரசாங்க வேலைகளில் பெரிய வெற்றியை எதிர்பார்க்கலாம். நிதி விஷயங்களில் நன்மை அதிகரிக்கும். தொழிலதிபர்கள் நீங்கள் செய்த முதலீடுகள் மூலம் லாபத்தை பெறுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் முழு ஆதரவு கிடைக்கக்கூடிய காலமாக இருக்கும். அதனால் எதிலும் தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். போட்டிக்கு தயாராக கூடிய இளைஞர்கள் வெற்றியை பெறுவார்கள். மாணவர்கள் படிப்பில் சிறப்பாக செயல்பட முடியும். அவசரமாக எந்த ஒரு முடிவை எடுப்பதை தவிர்ப்பது நல்லது. திருமண வாழ்க்கையில் துணையுடன் அனுசரித்து சென்றால் மகிழ்ச்சியான குடும்ப சூழல் உருவாகும்.

## தனுசு



தனுசு ராசிக்கு இந்த செப்டம்பர் மாதத்தில் மங்களகரமா-னதாகவும், வெற்றிகள் நிறைந்ததாகவும் இருக்கும். இந்த மாதத்தில் தொழில் தொடர்பாக பெரிய வாய்ப்புகளை பெறுவீர்கள். பணியிடத்தில் செயல்பாடுகள் நல்ல பலனை தரும். உங்கள் வேலையில் மகிழ்ச்சியை நிறைந்திருக்கும். உங்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் பெறுவீர்கள். வியாபாரம் தொழில் தொடர்பாக சில செல்வாக்கு மிக்க நபர்களின் அறிமுகம் உங்களுக்கு நல்ல வாய்ப்புகளை பெற்று தரும். எதிரிகள் வி'யத்தில் கவனமாக இருக்கவும். மூத்த அதிகாரிகளின் துணையால் வேலையில் முன்னேற்றம் அடைவீர்கள். சக நண்பர்களின் துணையால் இந்த ஒரு கடின-மான வேலைகளையும் முடிக்க முடியும். இந்த மாதத்தில் அதிர்'டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும் என்பதால் முயற்சிகளை அதிகப்படுத்தவும்.

## மகரம்



செப்டம்பர் மாதம் உங்களுக்கு சவாலானதாக இருக்கும். ப ணி யி ட த் தி ல் போட்டிகள் அதிகரிக்கும். ஆனால் சரியாக திட்டமிட்டால் வெற்றி கிடைக்கும். நிதி ரீதியாக சவாலானதாக இருக்கும். ஏற்கனவே செய்த

முதலீடுகளில் இருந்து எதிர்பார்த்த லாபம் கிடைக்காமல் போகலாம். குடும்பத்தினருடன் நல்ல நேரத்தை செலவிடும் வாய்ப்பு கிடைக்கும். ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை சாதாரணமாக இருக்கும். எவ்வளவு மோசமான சூழ்நிலையை சந்தித்தாலும், மன அழுத்தத்தைத் தவிர்த்து, எதிர்மறை சிந்தனைகளில் இருந்து விலகி இருங்கள்.

## கும்பம்

செப்டம்ர் மாதம் உங்களுக்கு புதிய மாற்றங்களையும், வாய்ப்புக்களையும் கொண்டு வரும். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நிதி நிலையில் நல்ல உயர்வு ஏற்படும். நீண்ட கால முதலீடுகளில் இருந்து நல்ல லாபம் கிடைக்கும். குடும்ப வாழ்க்கையில் சமநிலையை பேண முயற்சிக்க வேண்டும். குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் ஆரோக்கியத்தில் சற்று கவனம் செலுத்துங்கள். அதே சமயம் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்க உடற்பயிற்சி மற்றும் தியானத்தில் ஈடுபடுங்கள்.



## மீனம்



மீன ராசியை சேர்ந்தவர்களுக்கு விரும்பிய நற்பலன்கள் கிடைக்கும். தொழில் ரீதியாக கலவையான பலன்கள் பெறுவீர்கள். அன்புக்குரியவர்களுடன் நேரத்தை செலவிடவும் அவர்களின் ஆதரவை பெறவும் வாய்ப்பு உண்டு. குடும்பத்தின் பொருளாதார நிலைக்கு மேம்படுத்தும் விதமாக புதிய வருமான ஆதாரங்கள் உருவாக்கும். காதல் வாழ்க்கையில் கொஞ்சம் கவனமாக இருக்கவும். சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக மாறும். குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்து செல்வதால் உங்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் துணையுடன் இருக்கக்கூடிய கருத்து வேறுபாடுகள் நீங்கும். அதனால் உங்கள் உறவில் நெருக்கம் அதிகரிக்கும். காதல் கைகூடும். மாதத்தின் பிற்பகுதியில் இனிமையான பயணங்கள் செல்வதற்கான வாய்ப்புகள் உண்டு.

***Vijay Antony Film Corporation தயாரிப்பில், அஜய் திஷன் நடிக்கும் ”பூக்கி” பூஜையுடன் துவங்கியது!!**

Vijay Antony Film Corporation சார்பில், ஃபாத்திமா விஜய் ஆண்டனி தயாரிப்பில், அஜய் திஷன் நடிப்பில், அறிமுக இயக்குநர் கணேஷ் சந்திரா இயக்கத்தில், ரொமான்ஸ் காமெடி ஜானரில் இளைஞர்களை கவரும் படைப்பாக உருவாகும் புதிய திரைப்படம் “பூக்கி”.

இப்படத்தின் பூஜை படக் குழுவினருடன் திரை பிரபலங்கள் கலந்து கொண்டதுடன், வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் இயக்குநர்கள் வசந்தபாலன், ரத்னகுமார், “ஓஹோ எந்தன் பேபி“ பட நாயகன் ருத்ரா, ஒளிப்பதிவாளர் சக்திவேல், இயக்குநர் ராம் மகேந்திரா ஆகியோர் கலந்து கொண்டு படக்குழுவினரை வாழ்த்தினர்.

இன்றைய தலைமுறை தங்களுக்குள் செல்லமாக, கொஞ்சி அழைக்கும் வார்த்தையே “பூக்கி”. அது கதைக்கு பொருத்தமாகவும் கதைக்குள்ளும் வருவதால் இப்படத்திற்கு பூக்கி என தலைப்பிடப்பட்டுள்ளது.

விஜய் ஆண்டனி நடிப்பில் பெருவெற்றி பெற்ற சலீம் படத்தில் அறிமுகமாகி, ஜெயில், காரி, Miss Match (தெலுங்குப் படம்) உள்ளிட்ட படங்களுக்கு ஒளிப்பதிவாளராக பணியாற்றிய கணேஷ் சந்திரா, இப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார்.

“இன்றைய 2K தலைமுறை காதலுக்கு பெற்றோர்கள் குறுக்கே நிற்பதில்லை. ஆனால் காதலர்களே பிரச்சனையாக இருக்குகிறார்கள். அப்படியான 2K தலைமுறை காதலர்களின் ரிலேஷன்ஷிப் பிரச்சனைகளை மையமாக வைத்து கலக்கலான காமெடியுடன், பரபரப்பான திரைக்கதையில், ஒரு அழகான ரோம் காம் திரைப்படமாக இப்படம் உருவாகிறது.

மார்கன் படத்தில் தனது நடிப்பால் பாராட்டுகளை பெற்ற அஜய் திஷன் நாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக தனுஷா நடிக்கிறார். இவர்களுடன் பாண்டியராஜன், சுனில், இந்துமதி மணிகண்டன், விவேக் பிரசன்னா, பிளாக் பாண்டி, ஆதித்யா கதிர், பிரியங்கா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் இணைந்து நடிக்கின்றனர்.

நாயகனாக வெற்றிப்படங்களை வழங்கி வரும் விஜய் ஆண்டனி, தனது இசை ரசிகர்களை மகிழ்விக்கும் விதமாக, இப்படத்திற்கு இசையமைக்கிறார்.

உங்கள் அச்சாரம் You Tube Channel ல்

ரசித்து பார்க்க பல குறும்படங்கள்




சொல்லிட்டாளே காதல் கதை குறும்படம்



## செய்திக்கதம்பம்!

- பாப்பனப்பட்டு வ.முருகன்

### ஜப்பானின், “ஒரு நாள் மாணவர்“ திட்டம்!



பள்ளிக் காலம் கடந்து பல வருடங்கள் ஆன பிறகு, மீண்டும் ஒருமுறை அந்தப் பள்ளிக்குச் சென்று மாணவனாக வேண்டும் என்ற ஆசை, பலருக்கும் இருக்கும். ஆனால், அந்த ஆசை நிறைவேற வாய்ப்பே இல்லை. ஜப்பானுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், இப்போது அத்தகைய ஒரு வாழ்க்கையை அனுபவிக்க முடியும். “ஒரு நாள் மாணவர்“ எனும் புதிய திட்டத்தின் மூலம், விரும்புபவர்களை, ஒரு நாள் பள்ளியில் படிக்க வைக்கிறது ஜப்பான். ஜப்பானின், “உண்டோகயா“ என்ற நிறுவனத்தால், இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கிழக்கு ஜப்பானின் சிபா ப்ரிபெக்சரில் உள்ள ஒரு பழைய பள்ளியில், இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதை, வெறும் 17,000 ரூபாய்க்குப் பெறலாம். அதாவது, ஜப்பானின் 30,000 யென் செலுத்திய பிறகு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், இந்தத் திட்டத்தின் கீழ், உள்ள□ர்ப் பள்ளியில், மாணவராக ஒரு நாளைக் கழிக்கலாம். இந்தத் திட்டத்தின் மூலம், கையெழுத்து, கட்டானா சண்டை, உடற்கல்வி மற்றும் பல கற்றல் நடவடிக்கைகள் என், பல செயல்பாடுகளை அனுபவிக்க முடியும். மேலும், இந்த நிகழ்ச்சி, முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் நடத்தப்படுகிறது. சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்றாலும், ஜப்பானில் உள்ள கலாச்சாரம் மற்றும் கல்வி முறைகளை, வெளிநாட்டவர்களுக்கு அறிமுகப் படுத்துவதற்கும் இது முக்கியத்துவம் அளிக்கிறது. பங்கேற்பாளர்களுக்கு பள்ளி சீருடைகள் வழங்கப்படுகின்றன. அந்தத் சீருடையை அணிந்து கொண்டு, கிளப் நடவடிக்கைகளில், அவர்கள் பங்கேற்பதோடு, ஜப்பானின் தனித்துவமான பள்ளி கலாச்சாரத்தையும் அனுபவிக்கின்றனர்.

### ஆண்களுக்கு திருமண பாக்கியம் நல்கும் மலைக்கோவில்!



கர்நாடகாவில், திருமணமாகாத ஆண்கள், தங்கள் வாழ்க்கைத் துணையை அடையும் நம்பிக்கையில், ஒரு தனித்துவமான பயணத்தை மேற்கொள்கின்றனர். அவர்கள், நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்கள் தொலைவினைக் கடந்தும், மாதேஸ்வரன் மலைக் கோயிலுக்கு, பாதயாத்திரையாகவே சென்று வழிபாடு செய்கின்றனர்.

இந்தக் கோயில், திருமணமாகாத ஆண்களுக்கு, திருமண பாக்கியத்தை நல்குவதாக நம்பப்படுவதே, இந்த முரட்டு வழிபாட்டிற்கான காரணம். இந்தப் பாதயாத்திரை, இறை நம்பிக்கை, பக்தி மற்றும் தீவிர ஆன்மீகத்தின் அடையாளமாகவும் திகழ்கிறது. பாதயாத்திரையின் போது ஆண்கள், சாதாரண உடையில், காலணிகள் கூட இல்லாமல், கரடு முரடான மலைப்பாதைகளை கடந்து செல்வர். வழியில், அவர்கள் பாடல்கள் பாடி, பகிர்ந்து சாப்பிட்டு, ஒருவருக்கு ஒருவர் உற்சாகமூட்டியபடியே செல்வர். மாதேஸ்வரன் கோயிலை அடைந்ததும், அங்கு சிறப்பு பூஜைகள், பாரம்பரிய வழிபாடு என, பக்தியுடன் வழிபடுவர்.

இது ஒரு மத நிகழ்வு மட்டுமின்றி, கர்நாடகாவின் கலாச்சாரத்தில் பின்னிப் பிணைந்த, ஒரு சுவாரஸ்யமான கலாச்சார அடையாளமாகவும் உள்ளது. இந்த பாதயாத்திரை, இளைஞர்களுக்கு ஒரு சாகசமாகவும், திருமணம் என்ற கனவை நோக்கிய நம்பிக்கைப் பயணமாகவும் அமைகிறது.

இதைப் பார்ப்போர், “நம்பிக்கையும் உறுதியும் இருந்தால், எந்தத் தூரமும் தடையில்லை“ என்பதை உணர்ந்து, உத்வேகம் பெறுவர்.

**உலகின் மிகப்பெரிய குடும்பம்!**

வடகிழக்கு இந்திய மாநிலமான மிசோரமில், உலகின் மிகப்பெரிய குடும்பமாகக் கருதப்படும், சியோனா சனாவின் குடும்பம் வசிக்கிறது. இவர்களது வாழ்க்கை முறை, ஆச்சரியமூட்டும் வகையில் அமைந்துள்ளது. ஏனெனில், சியோனா சனா, 39 முறை திருமணம் செய்து, 94 குழந்தைகளுக்குத் தந்தையாகவும், 33 பேரக்குழந்தைகளுக்கு தாத்தாவாகவும் திகழ்ந்தார். இந்த பிரம்மாண்ட குடும்பம், மிசோரமின் பக்தவாங் கிராமத்தில், நான்கு மாடிகளும் 100 அறைகளும் கொண்ட, “சுவான் தார் ரன்“ (புதிய தலைமுறை இல்லம்) என்ற மாளிகையில் ஒன்றாக வாழ்கிறது. 1945ல் பிறந்த சியோனா, “சனா பவுல்“ என்ற கிறிஸ்தவ பிரிவின் தலைவராக இருந்தார். இந்தப் பிரிவு, பலதார மணத்தை அனுமதித்தது. 17 வயதில் முதல் திருமணம் செய்த அவர், ஒரு வருடத்தில் 10 பெண்களை மணந்த சாதனையும் படைத்தார். அவரது மனைவிகள், ஒரு பெரிய தங்குமிடத்தில் தங்கினர். வியக்கத்தக்க வகையில், அவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரிகளைப் போல ஒற்றுமையாக வாழ்கின்றனர். இந்தக் குடும்பத்தினருக்காக, ஒரு நாளைக்கு 30 கோழிகள், 60 கிலோ உருளைக்கிழங்கு, 90 கிலோ அரிசி என, பிரம்மாண்ட அளவில் உணவு தயாரிக்கப்படுகிறது. சியோனாவின் வாழ்க்கை முறை உலகளவில் கவனத்தை ஈர்த்து, அவரது இல்லம் சுற்றுலாத் தலமாக மாறியது. சியானோ, 2021ல் மரணமடைந்தாலும், அவரது குடும்பம் இன்றும் ஒன்றாக வாழ்கிறது.

**91.5 லட்சம் செலுத்தினால், இந்தத் தீவில் குடியுரிமை கிடைக்கும்!**



நவ்ரூ, பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள, ஒரு சிறிய தீவு நாடு. இந்த நாடு, இவ்வாண்டில், “தங்க பாஸ்போர்ட்“ எனும் முயற்சியை தொடங்கியுள்ளது. இதன்படி, 1.05 லட்சம் டாலர்கள் (சுமார் 91.5 லட்ச ரூபாய்) செலுத்தினால், இந்தத் தீவில், வெளிநாட்டவருக்கு குடியுரிமை வழங்கப்படுகிறது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் கடல் நீர்மட்ட உயர்வு, கடலோர அரிப்பு போன்ற பிரச்னைகளை எதிர்கொள்ள நிதி திரட்டுவதே, இதன் நோக்கம். கிட்டத்தட்ட 8 சதுர மைல் பரப்பளவு கொண்ட இத்தீவு நாடு, தனது முயற்சியின் மூலம், 500 விண்ணப்பங்களைப் பெற திட்டமிட்டுள்ளது. இது முதல் முயற்சி அல்ல஌ ஏற்கனவே 2003ல், இதேபோன்ற திட்டத்தில், அல்-கொய்தா உறுப்பினர்கள் குடியுரிமை பெற்று சர்ச்சையை ஏற்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. நவ்ரூவின் பொருளாதாரம், முன்பு கனிம வளத்தைச் சார்ந்திருந்தது, ஆனால், சுரங்கம் காரணமாக, இங்குள்ள 80 சதவிகித நிலம் வாழத் தகுதியற்றதாக மாறிவிட்டது. தற்போது ஆழ்கடல் சுரங்கம் மற்றும் தங்க பாஸ் போர்ட் திட்டம் மூலம், வருவாய் ஈட்ட முயல்கிறது. இது, சிறிய நாடுகளுக்கு பொருளாதார உதவியாக இருந்தாலும், பாதுகாப்பு கேள்விகளையும் எழுப்புகிறது. உலக வெப்பமயமாதலுக்கு எதிரான இந்த முயற்சி, புதுமையான நிதி திரட்டல் முறையாகவும் பார்க்கப்படுகிறது.

**பொதுப் போக்குவரத்தை முழுமையாக இலவசமாக்கிய நாடு!**



ஐரோப்பாவின் சிறிய நாடான லக்சம்பெர்க், உலகிலேயே முதல் முறையாக, “பொதுப் போக்குவரத்தை முழுமையாக இலவசமாக்கிய நாடு“ என்ற பெருமையை, 2020, பிப்ரவரி 29 முதல் பெற்றுள்ளது. பேருந்து, ரயில், டிராம் என, அனைத்து போக்குவரத்து வாகனங்களிலும், மக்கள் பயணச்சீட்டு இல்லாமல் பயணிக்கலாம். இச்சலுகை, லக்சம்பர்க் குடிமக்கள், சுற்றுலாப் பயணிகள் என, அனைவருக்கும் பொருந்தும். சுமார் 6.45 லட்சம் மக்களைக் கொண்ட இந்நாடு, போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

இதற்கு முன்பு, ஒரு நாள் டிக்கெட், வெறும் 4 யூரோக்கள் தான் என்றாலும், இப்போது அரசு வரி மூலம் நிதியளித்து இலவசமாக்கியுள்ளது.

இங்கு முதல் தர ரயில் பயணத்திற்கு மட்டுமே கட்டணம் செலுத்தும்படி உள்ளது.

உலகின் மிக உயர்ந்த தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி கொண்ட இந்நாடு, இதன் மூலம் கார் பயன்பாட்டைக் குறைத்து, பசுமையான எதிர்காலத்தை உருவாக்க முயல்கிறது.

"போக்குவரத்து ஓர் அடிப்படை உரிமை" எனப் பார்க்கப்படும் இந்த முயற்சி, உலக நாடுகளுக்கு ஒரு புதிய முன்மாதிரியாக அமைந்துள்ளது.

## ஆஸ்திரேலியாவில் வெற்றிக்கொடி நாட்டிய இந்தியர்!



ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்திய கோடீஸ்வரரான விவேக் சாந்த் சேகல், 80,199 கோடி ரூபாய் மதிப்புள்ள, மதர்சன் நிறுவனத்தை நடத்தி வரும் தொழிலதிபர்.

1957ல், டெல்லியில் பிறந்த இவர், தனது 18வது வயதில், வெள்ளி வணிகத்தில் காலடி எடுத்து வைத்தார். பின்னர், 1975ல், தனது தாய் ஸ்ரீமதி ஸ்வரன் லதா சேகலுடன் இணைந்து, மதர்சன் நிறுவனத்தைத் தொடங்கினார்.

அம்மாவும் மகனும் இணைந்து தொடங்கிய காரணத்தாலேயே, இவர்களின் நிறுவனத்திற்கு, "மதர்-சன்" என்ற பெயர்.

ஆரம்பத்தில் வெள்ளி வணிகத்தில் ஈடுபட்ட இவர்களின் நிறுவனம், பின்னர் திவாலாகும் நிலைக்கு தள்ளப்பட்டபோது, விவேக் தனது புத்திசாலித்தனத்தால், அதை வாகன உதிரிபாக தயாரிப்பு நிறுவனமாக மாற்றினார்.

இன்று, "சமவர்தனா மதர்சன் இன்டர்நே'னல்" என்ற பெயரில், உலக அளவில் பிரபலமான இந்நிறுவனம், பிஎம்டபிள்யூ, மெர்சிடிஸ், டொயோட்டா போன்ற பிராண்டுகளுக்கு, உதிரிபாகங்களை வழங்குகிறது. 41 நாடுகளில் செயல்படும் இந்நிறுவனத்தை, இவரது மகன் லக்'வாமன் சேகலுடன் இணைந்து நிர்வகிக்கிறார்.

டெல்லி பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற விவேக், ஆஸ்திரேலிய குடியுரிமை பெற்றவர். போர்ப்ஸ் பட்டியலின்படி, இவரது சொத்து மதிப்பு, 4.7 பில்லியன் டாலர்கள். இது இந்திய மதிப்பில், 40,967 கோடி ரூபாய்.

உலகளாவிய தணிக்கை மற்றும் ஆலோசனை நிறுவனமான நுசளெவ ரூ லுழரபெ (நுலு) நிறுவனம் வழங்கும், மதிப்பு மிக்க தொழில்முனைவோர் விருதை, 2016ல் பெற்ற இவர், வெறும் 2,500 ரூபாய் மாதச் சம்பளத்தில் தொடங்கி, இன்று உலகின் 713வது பணக்காரராக உயர்ந்துள்ளார்.

இவரது சாதனைப் பயணம், உலகளவில் தொழில்முனைவோருக்கு உத்வேகமாக உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

## வேலைக்குப் போகாமல் சம்பளம் பெற்று, "பேய் அதிகாரி" என்று அழைக்கப்பட்டவர்!



ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த, ஜோவாகின் கார்சியா என்ற 69 வயது நபர், ஆறு ஆண்டுகள் வேலைக்குச் செல்லாமலேயே முழு சம்பளம் பெற்று, உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளார்.

ஸ்பெயினின் காடிஸ் நகரத்தில் உள்ள நகராட்சி நீர் நிறுவனத்தில், கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையைக் கண்காணிக்கும் பொறியாளராகப் பணியாற்றிய இவர், 1990ல் பணியில் சேர்ந்தார். ஆனால், 2004 முதல், அலுவலகத்திற்கு வருவதை, இவர் நிறுத்தினார்.

ஆச்சரியமாக, இது யாருக்கும் தெரியாமல், ஆறு ஆண்டுகள் நீடித்தது. சிலர், 14 ஆண்டுகள் எனக் கூறுகின்றனர்.

இவர், ஆண்டுக்கு 37,000 யூரோக்கள் (சுமார் 41,500 டாலர்கள்) சம்பளமாகப் பெற்றார். இவரது ரகசியம் வெளியானது, 2010ல் தான்.

இவருடைய 20 ஆண்டு சேவைக்காக, பாராட்டு விருது வழங்கப்பட இருந்தபோது தான்,

இவர் வேலைக்கு வராதது தெரிந்திருக்கிறது. இதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. நீதிபதியிடம் ஜோவாகின், அரசியல் பழிவாங்கலால், தான் பணியில் ஒதுக்கப்பட்டதாகவும், தனக்கு வேலையே இல்லை என்றும் வாதிட்டார். இவரது வாதம் ஏற்கப் படாமல், இவருடைய ஓர் ஆண்டு சம்பளமான 27,000 யூரோக்கள் (30,000 டாலர்கள்) அபராதமாக விதிக்கப்பட்டது.

"பேய் அதிகாரி" என, ஸ்பெயின் ஊடகங்கள் அழைத்த இவரது கதை, சிரிப்பையும் சிந்தனையையும் ஒருங்கே ஏற்படுத்தியுள்ளது.

## ஜப்பானின், "நிர்வாண ரயில்"!



ஜப்பானில், "நாக்கி ரயில்" என்று அழைக்கப்படும், "ஜென்பி ரீன்கான்சென்" ரயில், ஒரு தனித்துவமான அதிவேக ரயிலாகும்.

இந்த ரயிலின் உட்புறம் முழுவதும், பளிங்கு போன்ற கண்ணாடி சுவர்களால் வடிவமைக் கப்பட்டுள்ளது. இதனால் இது, "நிர்வாண ரயில்" என்ற புனைப்பெயரோடு அழைக்கப்படுகிறது.

சுற்றிலும் கண்ணாடி சுவர்கள் இருப்பதால், இந்த ரயிலில் பயணிக்கும் பயணிகள், ஜன்னல் வழியாக, மலைகள், ஆறுகள், பசுமையான வயல் வெளிகள் என, இயற்கையின் அழகை, எந்தத் தடையுமின்றி, முழுமையாக ரசிக்க முடியும்.


2016ல் அறிமுகமான இந்த ரயில், சுற்றுலா பயணிகளை அதிக அளவில் கவர்ந்து, மிகவும் பிரபலமானதாக உள்ளது.

இந்த ரயிலில் உள்ள இன்னொரு சிறப்பம்சம், குழந்தைகளுக்காக ஒரு பகுதி, "பால் பிட்" எனப்படும் வண்ண பந்துகள் நிறைந்த விளையாட்டு இடமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, குழந்தைகளின் ரயில் பயணத்தை, மேலும் மகிழ்ச்சிகரமாக்குகிறது.

வெளிப்படையான தோற்றமும், பயணிகளுக்கு வசதியும் கலந்த இந்த ரயில், ஜப்பானின் புதுமையான சிந்தனையைப் பறைசாற்றுகிறது.

நிய்காட்டா மற்றும் எச்சிகோ-யுசாவா இடையே பயணிக்கும் இந்த ரயில், ஒரு சாதாரண ரயில் பயணத்தை வழங்காமல், மகிழ்ச்சி தரும் வித்தியாசமான அனுபவத்தை வழங்குவதாக உள்ளது.

## நாளிதழ் தயாரிக்கும், "ஏ.ஐ."!




இத்தாலியில் முதன்முறையாக முழுக்க முழுக்க செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) மூலம் தயாரிக்கப்பட்ட, "இல் போக்லியோ" (ஐட குழபடழை) நாளிதழ், உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

2025, மார்ச் முதல், ஆன்லைனில் வெளியாகத் தொடங்கிய இது, பாரம்பரிய பத்திரிகை உலகில், ஒரு புரட்சிகர மாற்றமாக பார்க்கப்படுகிறது.

வழக்கமாக மனித பத்திரிகையாளர்கள் செய்யும் செய்தி சேகரிப்பு, எழுத்து, தொகுப்பு ஆகியவற்றை, ஏ.ஐ. திறம்பட செய்து, ஒரு மாத காலத்திற்கு, தினமும் புதிய பதிப்பை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் சுவாரஸ்யம் என்னவென்றால், ஏ.ஐ. தன்னியக்கமாக உள்ளடக்கத்தை உருவாக்குவது மட்டுமல்லாமல், வாசகர்களின் ஆர்வத்திற் கேற்ப செய்திகளைத் தேர்ந்தெடுத்து வழங்குகிறது.

இத்தாலிய அரசியல், கலாச்சாரம், பொருளாதாரம் என, அனைத்துத் துறைகளிலும், இது தனது திறனை வெளிப்படுத்தியுள்ளது.

பலரும் இதை, "எதிர்கால பத்திரிகையின் முன்னோட்டம்" என, உற்சாகமாக வர்ணிக்கின்றனர். ஆனால் சிலர், மனித உணர்வுகளும், படைப்பாற்றலும் இல்லாத ஏ.ஐ. பத்திரிகை, நீண்ட காலம் நீடிக்குமா என, கேள்வி எழுப்புகின்றனர்.

எப்படியிருப்பினும், "இல் போக்லியோ" நாளிதழ், உலக அளவில் புதிய விவாதத்தை தொடங்கி வைத்துள்ளது.

# அச்சாரம்

ACCHARAM

பல்சுவை மாத இதழ்
Tamil Monthly

வ.எண். ______

## பத்திரிகை சந்தாதாரர் படிவம்

Passport Size Photo

பெயர் ______________ த.பெ. ______________

நிரந்தர முகவரி ______________________________

______________________________

பாலினம் __________ தொழில் ______________

ஆசிரியர் அவர்களுக்கு, நான் மேற்காணும் விலாசத்தில் வசித்து வருகிறேன். தங்களின் அச்சாரம் பத்திரிகைக்கு (ஆயுள்/ஆண்டு) // சந்தாதாரராக / நன்கொடையாளராக விரும்புகிறேன். கீழ்காணும் முகவரியில் எனக்கு பத்திரிகையை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## சந்தா கட்டண விபரம் ✔

| | | | |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | - | ரூ.5,000/- | |
| பத்தாண்டு சந்தா | - | ரூ.2,500/- | |
| ஆண்டு சந்தா | - | ரூ.250/- | |
| நன்கொடை | - | ரூ. | |

**பத்திரிகை அனுப்ப வேண்டிய முகவரி**

திரு/திருமதி ______________________________

______________________________

______________________________

______________________________

தொலைபேசி எண் __________ கைப்பேசி __________ இ.மெயில் __________

நாள்:

இடம்: சந்தாதாரர் கையொப்பம்


படிவம் மற்றும் சந்தா கட்டணத்தை ஆசிரியர், அச்சாரம், SF1 இரண்டாம் தளம் 5/10 அண்ணா காலனி விருகம்பாக்கம் சென்னை-600092 என்கிற முகவரிக்கு அனுப்பவும். டிடி அல்லது காசோலைகளை அச்சாரம் என்கிற பெயரில் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். சந்தாதாரர்களுக்கு பின்னர் பணம்பெற்று ரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**வங்கி கணக்கு விவரம்:**

**ACCHARAM - Current Account**
**Acc.No: 6565766161**
**Indian Bank, Saligramam Branch**
**IFS Code: IDIB000S082**

# உலக சினிமா

- CP செந்தில் குமார்




ºURSUED - (த்ரில்லர்) @ அமேசான் ப்ரைம்

ஹீரோ ஒரு பெரிய கார்ப்பரைட் கம்ப்பெனில ஓர்க் பண்றாரு.. அந்த கம்ப்பெனில ஒரு ஆராய்ச்சி பண்ணிட்டு இருக்காங்க.. அதாவது யாராவது காணாமபோனா அடுத்த 15 நிமி'த்துல அவங்களைக்கண்டு பிடிக்கற மாதிரி ஒரு சா.ீப்ட்வேர்.. ஒவ்வொருவர் உடம்புலயும் அந்த கருவியை பொருத்திட்டா போதும்..நாட்ல நடக்கும் பல குற்றங்கள், கடத்தல்கள் குறைஞ்சுடும்.. போலீஸ்க்கு பெரிய தலைவலி போயிடும்.. இந்த பிராஜக்ட் மட்டும் சக்சஸ் ஆகிட்டா உலகமே அவங்களைகொண்டாடும்..ஒன்றரை லட்சம் பில்லியன் டாலர் அவங்களுக்கு கிடைக்கும்

வில்லன் ஒரு புரோக்கர்.. இவன் வேலை என்னான்னா கம்மியா சம்பளம் வாங்கற திறமையான ஆட்களை நயமா பேசி, பிரெயின்வா' பண்ணி அவங்களை போட்டி கம்ப்பெனில சேர்த்து விட்டு அதுக்கான கமி'னை வாங்கற ஆளு.. கிட்டத்தட்ட புரோக்கர் மாதிரி..

ஈரோடு,திருப்பூர் நகரங்களில் இது மாதிரி பரவலா பார்க்க முடியும்.. அதாவது கார்மெண்ட்ஸ் தொழில் தான் இங்கே கொடி கட்டி பறக்குது,, டெய்லர்கள், கட்டிங்க் மாஸ்டர்கள்,லைன் சூப்பர்வைஸர்ஸ் தேவை அதிகமாகிட்டே இருக்கு.. இவங்க என்ன பண்ணுவாங்கன்னா கேரளா, திருநெல்வேலி ஏரியாக்களில் போய் ஆளுக்கு ரூ5000 டு ரூ 10,000 குடுத்து கூட்டிட்டு வந்துடுவாங்க.. வாரா வாராம் சனிக்கிழமை சம்பளம்.. கம்ப்பெனியை விட்டு நிக்கனும்னா அந்த அட்வான்ஸ் பணத்தை திருப்பிக்கொடுக்கனும்..இதுக்குன்னே புரோக்கர்ஸூம் இருக்காங்க.. அதே மாதிரி இங்கே ஐ டி கம்ப்பெனில பெரிய அளவுல நடக்குது. அவ்ளவ் தான் வித்தியாசம்..

ஹீரோவோட மனைவிக்கு ஹீரோ மேல ரொம்ப நாளா ஆதங்கம்.. கம்மி சம்பளம் வாங்கறார்னு. அடிக்கடி அவங்களுக்குள்ள வாக்குவாதம் வரும், வளரும்.. தொடரும்.. உறவுகள் மட்டும் தொடர்கதை அல்ல, அவங்களுக்கிடையேயான பிணக்குகளும் ஒரு தொடர்கதை தான்..

வில்லன் என்ன பண்றான்? ஹீரோவுக்கு மெண்ட்டல் டார்ச்சர் கொடுக்கறான்

அவன் சொல்ற கம்ப்பெனிக்கு வந்து சேர்ந்தே ஆகனும்.. உங்கள□குத்தான் லாபம்.. டபுள் மடங்கு சம்பளம்.. இந்த சான்ஸ் மறுபடி கிடைக்காதுன்னு.. அதுவும் இல்லாம ஹீரோ ஓர்க் பண்ற கம்ப்பெனி பாஸ்க்கு ஒரு மெயில் வேற அனுப்பி ஹீரோவை மாட்டி விடறான்.. அதாவது உங்க ஆள் எங்க கம்பேனிக்கு வரப்போறார்னு.. இதனால ஹீரோ ஓர்க் பண்ற கம்பெனி ஓனர்க்கும், ஹீரோவுக்கும் மனத்தாங்கல்கள்,வாக்குவாதங்கள் நடக்குது..

ஹீரோ, ஹீரோயின் வெக்கே'னுக்காக ஒரு இடத்துக்கு போறாங்க.. ஹீரோவோட ஓனர் என்னா நினைக்கறார்னா புது கம்ப்பெனில சேர பிளான் போடத்தான் அங்கே போய் இருக்கான்னு.. வில்லன் ஹீரோ போற பக்கம் எல்லாம் தொடர்ந்து டார்ச்சர் தர்றான்.. ஹீரோ இல்லாதப்ப அவன் மனைவி கிட்டே வந்து டார்ச்சர் பண்றான்..

மனைவி வில்லனின் டார்ச்சர் பற்றி ஹீரோ கிட்டே சொல்லி அவன் சொல்ற மாதிரி



அந்த கம்ப்பெனில தான் சேர்ந்துடுங்களேன்னு கேட்கறா.. ஹீரோ மனைவி கிட்டே அவன் உன்னை தொட்டனா?ன்னு விவகாரமா ஒரு கேள்வி கேட்கறான்

தம்பதிகளுக்குள் தேவை இல்லாத சண்டை, ஹீரோ இந்த மெண்ட்டல் டார்ச்சர்ல இருந்து எப்படித்தப்பிக்கிறான்? அப்டிங்கறதை விறுவிறுப்பான திரைக்கதை மூலம் சொலி இருக்காங்க..

இயக்குநர் பாராட்டு பெறும் இடங்கள்

1. எடுத்துக்கொண்ட கதை என்னவோ அந்த நேர்கோட்டில் இருந்து கொஞ்சமும் மாறாமல் சீராக திரைக்கதை அமைத்த உத்தி.. கமலின் மகா நதி படம் போல் நீட்டான திரைக்கதை பெரிய பிளஸ்..

2. படம் லேசா போர் அடிக்கற மாதிரி இடம் வர்ற டைம்ல வில்லன் ஹீரோ இல்லாத டைம்ல ஹீரோயின் கிட்டே தகராறு பண்ணுவதும் அதை தொடர்ந்து ஆடியன்சிடம் ஒரு பயம் கலந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதும்.. ( நான் படம் பார்த்தப்போ வில்லன் ஹீரோயினை ரேப்பிடுவான்னு நினைச்சேன். ஆனா அது நடக்கலை )

3. ஹீரோ, ஹீரோயின், வில்லன் 3 பேர் நடிப்பும் கன கச்சிதம்.. ஒளிப்பதிவு, இசை எல்லாம் தேவையான அளவுக்கு எளிமையா இருந்தது.. படத்துல ஏகப்பட்ட வசனங்கள்.. ஆனாலும் ரசிக்கலாம்..

பேனா...
எண்ணங்களை
வரி ஓவியமாய்
தீட்டிடும் தூரிகை.

மரம்...
சுவாசம் கொள்ளும்
இயற்கையின் கொடை.

நதி...
பிறக்கும் இடம்
மீண்டும் சேர்வதில்லை.

அமைதி ...
மௌனத்தின் மொழி.

மின்னல்...
ஆகாயக் கூரையின்
ஒளிக் கீற்று.

இடி...
மழையின்
முன் அறிவிப்பு.

மேகம்...
வான் மகள்
கூந்தலில் சூடிய
மல்லிகை.

வானவில்...
மழை முடிந்த பிறகு
வெயில் போட்ட
கோலம்.

நட்சத்திரங்கள்...
வானில் பூத்த
மின்மினி பூக்கள்.

மழை...
விண்ணையும்
மண்ணையும்
இணைக்கும் தந்தி.

- கவிஞர் கா.கலைச்செல்வி,
மாரப்பம்பாளையம் புதூர்,
திருச்செங்கோடு.

பார்க்க ரசிக்க

சினிமா படங்கள் குறும்படங்கள் ஆல்பம் பாடல்கள் சினிமா பாடல்கள்

சினிமா ஆடியோ விழாக்கள்

பிரபலங்களின் பேட்டிகள் மற்றும் பல நிகழ்ச்சிகள் காண

## அச்சாரம் tv @ SKRN MEDIA (you tube channel)








## SUBSCRIBE LIKE SHARE

# கவிதைக் கூடல்

## வடுவான முத்தம்!

வயற்காட்டு வேலை முடித்து அந்தியில் வீடு திரும்பும்
அப்பாவிற்கு
எனைக் கண்டதும்
கைகளிரண்டும் கால்களாய்
உருமாறுகின்றன

“அம்பாரி,அம்பாரி
ஆனை மேலே அம்பாரி“ என
உச்சந்தலை மயிரைப் பிடித்து
உலுக்கி ஆடும் எனக்கோ
பேரானந்தம்

காசு கொடுக்காமலே
அக்காவிற்கு ஒற்றைக் காலை
தும்பிக்கையாக்கி ஆசிர்வதித்து
மகிழச் செய்த அப்பாவை
என் பிஞ்சு விரல்களால்
வருடிய போது
அன்றைய வலி மறைந்திருக்கும்

முதுமையில் குளியலறையிருந்து
படுக்கையில் கிடத்த
என் முதுகில் சுமந்தபோது
என் கழுத்தில் அப்பா இட்ட
அந்த ஒற்றை முத்தமோ
இப்போது வடுவாகிப் போனது
வரலாற்றின் மிச்சமென

எங்கோ தூரத்து வானொலிப்பெட்டியிலிருந்து
இசைக்க ஆரம்பிக்கின்றது
“அம்பாரி,அம்பாரி
ஆனை மேலே அம்பாரி“ என
இப்போது
எனக்கும் முளைக்க ஆரம்பித்தன
இன்னுமிரண்டு கால்கள்.

- பொ.தமிழ்த்தென்றல், திட்டக்குடி

## மதி விளையாட்டு!

உறக்கத்தில் இருக்கும்
இளமதியின் உதடுகளில்
மெல்லிய புன்னகையொன்று
மலர்ந்து
மறையும் பொழுதில்
மேகங்களினூடே ஒளிந்து
விளையாடிக் கொண்டிருந்தது
வெண்மதி.

## குடைக்குள் அடங்கா வானம்!

மேகமென
நீ திரள்கையில்
குடையை
மடித்து வைத்து விட்டு
நிற்கிறேன் நான்
என் குடைக்குள் அடங்கா
வானம் நீ.


## வெட்க மருதாணி!

உன் விரலோடு
விரல் சேர்கையில்
வேரின்றி நீரின்றி
துளிர்விடத் தொடங்கியிருந்தது
உன் மேனியெங்கும்
மருதாணிச் செடிகள்.

- வீ.வைகை சுரேஷ்

(தொகுப்பு: - பாப்பனப்பட்டு வ.முருகன்)

Owned, Published and Printed by M.C.SEKAR Published from SF1, 2nd Floor, 5/10, Anna Colony, Virugambakkam, Chennai - 600 092. Printed at J.M.PROCESS at 22/49, Subedar hussain Street, Border thottam, Royapettah, Chennai - 600 014. Editor: M.C.SEKAR


அச்சாரம்
OTT
OTT
விரைவில்...

ACCHARAM, Tamil monthly, September 2025 RNI No.TNTAM/2016/69258 R.Dis.No.610/2016
Date of publication 1st Every Month Postal Reg.No.TN/CC(S)DN/559/23-25
Poster at Pathrika channel Egmore Posted between 1-7 September 2025

